Registered as a Newspaper

பக்கங்கள் 12

விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 38
கதிர் : 234


செவ்வாய்க்கிழமை 18 ஜூலை 2023

ஆடி 02 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

# 13ஐ வலியுறுத்திய கடிதத்தால் இந்திய நிலைப்பாட்டில் பின்னடைவு

## கடிதத்தில் கையெழுத்திடாமைக்கு அதுவே காரணம்

## அமெரிக்கத் தூதுவரிடம் எடுத்துரைத்தார் சுமந்திரன்



**கொழும்பு, ஜூலை 18**

**13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துமாறு கடந்த ஆண்டு தமிழ்க் கட்சிகள் அனைத்தும் இணைந்து இந்தியாவுக்கு கடிதம் எழுதியமையைத் தொடர்ந்து இந்தியாவின் அரசியல் தீர்வு தொடர்பான நிலைப்பாட்டில் பின்னடைவு ஏற்பட்டுள்ளது.** »11

## சிங்களவருக்கு உண்மையைச் சொல்லாமல் பேச்சுக்களில் பங்கேற்பதில் அர்த்தமில்லை

### கஜேந்திரகுமார் எம்.பி. அமெ. தூதருக்கு தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 18
ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தமிழ்க் கட்சிகளுடன் நடத்தும் பேச்சுகளின் வரையறை என்ன என்பதை சிங்கள மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும். சிங்கள மக்களுக்கு உண்மையைச் சொல் »11

## எப்போதும் உதவிசெய்ய சர்வதேசம் வரமுடியாது!

### அமெரிக்கத் தூதுவர் உபதேசம்

கொழும்பு, ஜூலை 18
இலங்கையில் வடக்கிலும் தெற்கிலும் எதெற்கெடுத்தாலும் சர்வதேச சமூகம் வெள்ளையர்கள் காப்பாற்றவேண்டும் என்ற மனோநிலை உள்ளது. சர்வதேச சமூகத்துக்கும் சில வரையறைகள் உள்ளன என்பதை உணரவேண்டும் - இவ்வாறு இலங்கைக்கான அமெரிக்கத் »12

## நாவாந்துறையில் குழு மோதல்: எஸ்.ரி.எப். களமிறக்கப்பட்டது

### 4 பேருக்கு காயம், சொத்துக்கள் சேதம்

யாழ்ப்பாணம், ஜூலை 18
நாவாந்துறைப் பகுதியில் இரண்டு குழுக்களுக்கிடையில் நேற்று மாலை ஏற்பட்ட மோதல் காரணமாக பல வீடுகளும் சொத்துக்களும் சேதப்படுத்தப்பட்டுள்ளதுடன் 4 பேர் காயங்களுடன் மருத்துவமனையில் »11

## 13ஐ நடைமுறைப்படுத்த அழுத்தம் கொடுங்கள்!

### சிவில் பிரதிநிதிகள் என்று சொல்வோரால் கடிதம்

யாழ்., ஜூலை 18
இந்தியாவுக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் 13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த அழுத்தம் கொடுக்கக் கோரி வடக்கு - கிழக்கு சிவில் சமூகப் பிரதிநிதிகள் என்று தம்மைத் தாமே அடையாளப்படுத்திக்கொண்ட »12

## மாணவியை அடித்த விவகாரம்; நிதானமிழந்து தாக்கிவிட்டேன்

### கைதான அதிபர் நீதிமன்றில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 18
நான் நிதானமிழந்து 9 வயது மாணவியைத் தாக்கிவிட்டேன் - இவ்வாறு ஊர்காவற்றுறை நீதிமன்றில் பாடசாலை அதிபர் தெரிவித்துள்ளார். »10

## திருமணமாகி 4 மாதங்கள்; காய்ச்சலால் பெண் மரணம்

யாழ்ப்பாணம், ஜூலை 18
திருமணமாகி நான்கு மாதங்களேயான நிலையில் காய்ச்சல் காரணமாக இளம் குடும்பப் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார். »11

## 12 வயதுச் சிறுவன் மீது சிறிய தந்தை சூடு வைப்பு

### காயங்களுடன் மருத்துவமனையில் சேர்ப்பு

## போலி லைசென்ஸ் விவகாரம்; போக்குவரத்துத் திணைக்களத்தினரும் பொலிஸ் விசாரணை வளையத்துக்குள்!

விரிவுகள் - பக் - 11 இல்

### உள்ளூராட்சித் தேர்தல் அறிவிப்பு

## ஆணைக்குழு உறுப்பினர்களுக்கு தெரிவுக்குழு ஊடாகத் தொல்லை

### அரசாங்கத்தின் ஆகப்பிந்திய முயற்சி

கொழும்பு, ஜூலை 18
உள்ளூராட்சித் தேர்தல் அறிவிக்கப்பட்டமையால் நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமை மீறப்பட்டுள்ளமை தொடர்பில் தெரிவுக்குழு அமைக்கப்படவேண்டும் என்ற யோசனை நாடாளுமன்றத்தில் இன்று »10

## தெரிவுக்குழு நியமிப்பு: பித்தலாட்டத்தில் அரசு

### கொந்தளிக்கிறார் சஜித்



கொழும்பு, ஜூலை 18
அரசாங்கம் திடீரென நாடாளுமன்ற அலுவல்களுக்கான குழுக் கூட்டத்துக்கு அழைப்பு விடுத்து, அடுத்தநாளே தேர்தல் வேலைத்திட்டத்தில் தேர்தல்கள் ஆணைக்குழு மற்றும் அதன் அங்கத்தவர்கள் எவ்வாறு செயற்படவேண்டும் »12

செலான் வங்கியிடமிருந்து
உங்கள் தங்கப் பவுணிற்கு...
முற்பணம்
ரூ. 120,000/=
வட்டிவீதம் மேலும் குறைக்கப்பட்டுள்ளது.
• அதிகபட்ச இரகசியத்தன்மை
• சிநேகபூர்வமான உடனடி சேவை
• சிறந்த பாதுகாப்பு
மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள செலான் வங்கியை நாடுங்கள்
011 200 88 88
செலான் தங்கக்கடன்
செலான் வங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அரசை நெருக்கடிக்குள்ளாக்கினால் வட்டியுடன் நட்டஈடு செலுத்துவர்!

## போராட்டத்தில் ஈடுபடுவோருக்கு பிரசன்ன ரணதுங்க எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 18

கட்சியை இரண்டாம் பட்சமாக்கி நாட்டுக்கு முன்னுரிமை வழங்கி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் அரசாங்கத்தைத் தோற்றுவித்துள்ளோம். நாடு தற்போது வழமைக்குத் திரும்பியுள்ளது. போராட்டக்காரர்கள் என குறிப்பிட்டுக் கொள்பவர்கள் எமது ஆதரவாளர்களை தொடர்ந்து நெருக்கடிக்குள்ளாக்கினால் வட்டியுடன் நட்டஈடு செலுத்த அவர்கள் தயாராக வேண்டும் - இவ்வாறு வீடமைப்பு அபிவிருத்தி அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

பொருளாதாரப் பாதிப்பை ஒரு தரப்பினர் அரசியல் நெருக்கடியாக மாற்றியமைத்தார்கள். எரிபொருள், எரிவாயு ஆகிய அத்தியாவசிய சேவை விநியோகக் கட்டமைப்பில் ஏற்பட்ட பாதிப்பு, பொருளாதாரப் பாதிப்பு ஆகியவற்றால் பாதிக்கப்பட்ட மக்கள் எமது அரசாங்கத்துக்கு எதிராகப் போராட்டத்தில் ஈடுபட்டார்கள்.

மக்களின் ஜனநாயக போராட்டத்தை மக்கள் விடுதலை முன்னணி, முன்னிலை சோசலிசக் கட்சி பயங்கரவாதப் போராட்டமாக மாற்றியமைத்தது. மக்கள் ஆணையுடன் ஆட்சிக்கு வர முடியாத தரப்பினர் போராட்டத்தின் ஊடாக ஆட்சியதிகாரத்தை கைப்பற்ற எடுத்த முயற்சியை நாடாளுமன்றத்தின் ஊடாக நாங்கள் தோற்கடித்து ஜனநாயகம், நாட்டில் சட்டம் மற்றும் ஒழுங்கு ஆகியவற்றை உறுதிப்படுத்தினோம்.

போதைப்பொருள் பாவனையாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள் 'அரகலய' என்று குறிப்பிட்டுக் கொண்டு கடந்த ஆண்டு மே மாதம் 9 ஆம் திகதி திட்டமிட்ட வகையில் பொதுஜன பெரமுன அரசியல்வாதிகள் மற்றும் எமது ஆதரவாளர்களின் வீடுகளுக்குத் தீ வைத்தார்கள்.

69 இலட்சம் மக்கள் எதிர்பார்த்ததை முழுமைப்படுத்தவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் அரசாங்கத்தைத் தோற்றுவித்துள்ளோம்.

நாடு பெரும் பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டிருந்தது.

கட்டம் கட்டமாக நாடு வழமைக்குத் திரும்புகிறது. நெருக்கடியான சூழ்நிலையில் பொதுஜன பெரமுன எடுத்த தீர்மானம் சிறந்தது என்பதை மக்கள் ஏற்றுக்கொண்டுள்ளார்கள் - என்றார். (எ-இ)

## கோத்தாவைக் கொண்டுவந்தது வீரவன்ஸவும், கம்மன்பிலவுமே

### சனத் நிஷாந்த தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 18

கோத்தாபய ராஜபக்சவை ஜனாதிபதி வேட்பாளராக அறிவிக்கத் தீர்மானித்தபோது தனிப்பட்ட முறையில் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தேன். விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில ஆகியோரே கோத்தாபய ராஜபக்சவைக் கொண்டு வந்தார்கள். ஜனாதிபதி வேட்பாளர் விவகாரத்தில் முரண்பட்டிருந்தால் இரு ஜனாதிபதி வேட்பாளர்களைக் களமிறக்க நேரிட்டிருக்கும் - இவ்வாறு நீர் வழங்கல் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

பெரும் போராட்டத்துக்குப் பின்னர் மீண்டெழுந்துள்ளோம். உரப்பற்றாக்குறை மற்றும் விவசாயத் துறை வீழ்ச்சிக்குப் பின்னரே அரசாங்கத்துக்கு எதிராக மக்கள் போராட்டத்தில் ஈடுபட ஆரம்பித்தார்கள். இதுவே உண்மை. தவறைப் பகிரங்கமாக ஏற்றுக்கொள்ள வேண்டும்.

கோத்தாபய ராஜபக்ச ஜனாதிபதி வேட்பாளராக அறிவிக்கத் தீர்மானம் எடுக்கப்பட்டபோது பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்சவிடம் தனிப்பட்ட முறையில் இந்தத் தீர்மானம் சிறந்ததாக அமையுமா எனக்கேட்டு எதிர்ப்புத் தெரிவித்தேன்.

கோத்தாபய ராஜபக்சவை ஜனாதிபதி வேட்பாளராக அறிவிக்க முன்னர் அவர்தான் ஜனாதிபதி வேட்பாளர் என தற்போது எமக்கு எதிராக அரசியல் செய்யும் விமல் வீரவன்ஸ, உதயகம்மன்பில ஆகியோர் மக்கள் மத்தியில் குறிப்பிட்டு மக்களை ஒன்றுதிரட்டினார்கள். அவ்வாறான நிலையில் கட்சிக்குள் முரண்பட்டுக் கொண்டால் ஜனாதிபதித் தேர்தலுக்கு அப்போதைய எதிர்க்கட்சி சார்பில் இரு வேட்பாளர்களைக் களமிறக்க வேண்டியிருக்கும்.

பெரும் எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் மக்கள் கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அரசாங்கத்தைத் தோற்றுவித்தார்கள். அரசியல் மற்றும் பொருளாதார ரீதியில் எழுந்த சவால்களை வெற்றிகொள்வதில் எமது அரசாங்கம் தோல்வியடைந்ததால் போராட்டம் தீவிரமடைந்தது. அது ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தியது - என்றார். (எ-இ)

## இலங்கை வருகிறார் சீன உயர் அதிகாரி!

கொழும்பு, ஜூலை 18

சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழு உறுப்பினர் யுவான் ஜியாஜுன் இந்த வாரம் இலங்கை வரவுள்ளார்.

எதிர்வரும் ஜூலை 19ஆம் திகதி இலங்கைக்கு வரும் அவர், ஜூலை 23ஆம் திகதி வரை நாட்டில் தங்கியிருப்பார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தத் தகவலை இலங்கைக்கான சீனத் தூதரகம் தனது ருவிற்றர் பதிவில் உறுதிப்படுத்தியுள்ளது.

அதேவேளை, பல ஒப்பந்தங்களை மேற்கொள்வதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜூலை 21ஆம் திகதி இந்தியா பயணிக்கவுள்ளார்.

இந்நிலையிலேயே சீன அதிகாரியின் வருகை ஒழுங்கமைக்கப் பட்டுள்ளது. (எ-இ)

## 50% இருப்பை பேணுவதற்கு உத்தரவு

### எரிபொருள் நிலையங்களுக்கு விடுக்கப்பட்டது எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 18

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான அனைத்து எரிபொருள் நிரப்பு நிலையங்களிலும் ஐம்பது வீத எரிபொருள் இருப்புப் பேணப்படுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

இந்த உத்தரவுகளைப் பின்பற்றாத எரிபொருள் நிரப்பு நிலையங்களை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தனது கட்டுப்பாட்டின் கீழ் எடுத்துக் கொள்ளும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக 770 எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு இதுவரை கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என்று பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன தெரிவித்தார்.

இந்த எரிபொருள் நிரப்பு நிலையங்கள் ஐம்பது வீத எரிபொருள் இருப்பைப் பராமரிக்காது போனால், அவை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் கையகப்படுத்தப்படும். கொழும்பு, ராஜகிரியவில் இதுவரை விதிகளைப் பின்பற்றாத எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (எ-இ)

## பொறுப்புகளை கைவிட்டு ஓடமாட்டாராம் கெஹலிய

கொழும்பு, ஜூலை 18

நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டால் அதை எதிர்கொள்ளத் தயார் என்று சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

நாங்கள் எங்கள் கடமைகளைச் செய்யாமல் ஓடமாட்டோம் என உத்தரவாதம் அளிக்கின்றேன். பொறுப்பைக் கைவிட்டு ஓடுவதற்குப் பதில் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எதிர்கொள்ளத் தயார். நாடாளுமன்றத்தில் எனக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டால் அதை எதிர்கொள்ளத் தயார் - என்றார். (எ-இ)

## குழந்தை மர்மச்சாவு! தடுப்பூசியா காரணம்?

கொழும்பு, ஜூலை 18

தடுப்பூசி செலுத்தி ஒருநாளைக்குப்பின்னர் திடீரென ஏற்பட்ட நோய் நிலைமை காரணமாக, 4 மாதக் குழந்தையொன்று உயிரிழந்த சம்பவம் குளியாப்பிட்டிய மருத்துவமனையில் நடந்துள்ளது.

கடந்த சனிக்கிழமை 4 மாதக் குழந்தைக்கு பண்டுவஸ்நுவர மேற்கு சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகத்தால் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது.

தடுப்பூசி செலுத்தப்பட்ட பின்னர் காய்ச்சல் அறிகுறிகள் ஏற்பட்டுள்ளதுடன், உரிய சிகிச்சைகள் அளிக்கப்பட்ட பின்னரும் அந்தக் குழந்தைக்கு காய்ச்சல் அதிகரித்துள்ளது.

பின்னர் குழந்தையை குளியாப்பிட்டிய போதனா மருத்துவமனையில் அனுமதிக்க அவரின் பெற்றோர் நடவடிக்கை எடுத்திருந்ததுடன், குழந்தை உயிரிழந்து விட்டது என்று மருத்துவமனைத் தகவல்கள் குறிப்பிடுகின்றன. குழந்தையின் சடலம் தற்போது, குருநாகல் போதனா மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னரே குழந்தைக்குச் செலுத்தப்பட்ட தடுப்பூசியின் தாக்கம் உயிரிழப்பின்போது உள்ளதா என்பதை அறிந்துகொள்ள முடியும் என்று மருத்துவமனைத் தகவல்கள் தெரிவித்தன. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொழும்பு

# தேசிய மருத்துவமனைக்கு உச்சக்கட்டப் பாதுகாப்பு!

கொழும்பு, ஜுலை 18

**கொழும்பு தேசிய மருத்துவமனைக்கும், அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் நேற்றுப் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டது.**

மருத்துவமனைகளில் அண்மைக்காலமாகச் சம்பவித்த இறப்புகள் தொடர்பில் நாடளாவிய ரீதியில் கடும் அதிருப்தி ஏற்பட்டுள்ளது. தாதியர் சங்கம் உள்ளிட்ட மருத்துவ அமைப்புகளும் பொதுமக்களும் தரமற்ற மருந்துப் பொருள்களுக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடத் திட்டமிட்டுள்ளன. இந்த நிலையிலேயே கொழும்பு தேசிய மருத்துவமனைக்கு நேற்றுப் பாதுகாப்புப் பலப்படுத்தப் பட்டது.

தரமற்ற மருந்துப்பொருள்கள் விநியோகிக்கப்பட்டமைக்குப் பொறுப்பேற்று சுகாதாரத்துறை அமைச்சர் பதவி விலகவேண்டும் என்று பலரும் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-இ)

## டொலர் நேற்று ரூபா 327




கொழும்பு, ஜுலை 18

இலங்கை மத்திய வங்கி வெளியிட்ட தகவல்களின் அடிப்படையில், அமெரிக்க டொலர் ஒன்றுக்கான இலங்கை நாணயப் பெறுமதி 327 ரூபாவாகப் பதிவானது.

அத்துடன், டொலரின் கொள்வனவுப் பெறுமதி 323.29 ரூபாவாகப் பதிவானது. இதேவேளை யூரோவின் கொள்வனவுப் பெறுமதி 350.96 ரூபாவாகவும், விற்பனைப் பெறுமதி 368.78 ரூபாவாகவும் பதிவானது. (ம-இ)

## ஹெரோயினுடன் இளைஞர் கைது!

யாழ்ப்பாணம், ஜுலை 18

கல்வியங்காடு பகுதியில் ஹெரோயினுடன் இளைஞர் ஒருவரை விசேட அதிரடிப்படையினர் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை கைது செய்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிடைக்கப்பெற்ற புலனாய்வுத் தகவலுக்கமைய சம்பவ இடத்துக்கு விரைந்த விசேட அதிரடிப்படையினர் சந்தேகத்துக்கு இடமான முறையில் பயணித்த இளைஞர் ஒருவரை வழிமறித்து சோதனையிட்ட நிலையில் அவரிடமிருந்து 80 மில்லிகிராம் ஹெரோய்ன் மீட்கப்பட்டதுடன் சந்தேகநபரும் கைதுசெய்யப்பட்டார். (ம-ரி2.125)

## திட்டமிடலற்ற தீர்மானங்களால் அரசாங்கத்தைப் பலப்படுத்தாதீர்

### கம்மன்பில கோரிக்கை



கொழும்பு, ஜுலை 18

உரிய ஏற்பாடுகளின்றி சுகாதார அமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்படும் பட்சத்தில் அதன்மூலம் அரசு பலமடையக்கூடும் என்று பிவிதுரு ஹெலஉறுமயவின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது சுகாதார அமைச்சருக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தியால் முன்வைக்கப்படவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

சுகாதார அமைச்சர்மீது மட்டுமல்ல இந்த அரசுமீது மக்கள் நம்பிக்கை இழந்துள்ளனர். எதிரணி தமது கடமையை சரிவர நிறைவேற்றாமல், நம்பிக்கையில்லாப் பிரேரணை முன்வைக்கப்பட்டால் அது எதிரணியை பலப்படுத்துவதாகவே அமையும். உடல் பலத்தைவிட மூளையாலே வேலை செய்யவேண்டும் என்று கம்மன்பில மேலும் தெரிவித்தார். (ம-44)



## அதிபரின் நியமனத்துக்கு எதிராகப் போராட்டம்!

யாழ்ப்பாணம், ஜுலை 18

யாழ்ப்பாணம் வேலணை மத்திய கல்லூரியில் புதிதாக நியமிக்கப்படவுள்ள அதிபரின் நியமனத்துக்கு எதிராக நேற்றுப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கடமையில் இருந்த அதிபர் ஜுன் மாதம் 9 ஆம் திகதி கடமையில் இருந்து ஓய்வு பெற்ற நிலையில், அவருடைய இடத்துக்கு கிறிஸ்தவ அதிபர் ஒருவர் நியமிக்கப்படவுள்ளார். இந்த நிலையிலேயே அவருடைய நியமனத்துக்கு எதிராக நேற்றுப் போராட்டம் முன்னெடுக்கப் பட்டது.

நிர்வாகக் கட்டமைப்புகளிலுள்ள அதிகாரிகள் மத முரண்பாட்டை ஏற்படுத்தும் இவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுப்பது பொருத்தமானதல்ல என போராட்டக்காரர்கள் சுட்டிக்காட்டினர். இது தொடர்பில் ஆளுநருக்கு கடிதமொன்றை அனுப்பவும் [illegible] தீர்மானித்துள்ளனர். (ம-27)




அச்சுவேலியில உலவிக்குளம் பிள்ளையார் எண்டு கேட்டால் கனபேருக்கு விளங்காது. 'ஆமிக்காரர் தேர் இழுக்கிற கோயில் எது?' எண்டால் டக்கெண்டு விளங்கிடும். அந்தளவுக்கு ஒவ்வொரு வருசமும் ஆமி வராமல் இப்ப அங்க தேர் இழுபடாது எண்ட நிலைமை. இந்தக் கோயில்ல கிட்டடியில நடந்த சம்பவமொண்டு தான் இப்ப பேஸ்புக்கில ஒரு ஓட்டம் ஓடுது.

வெளிநாட்டில இருந்து ஒரு குடும்பம், இந்தக் கோயிலைக் கும்பிட வந்திருக்கினம். வெளிநாட்டில இருந்து வந்தவை எண்டதால, அந்தக் குடும்பத்தில இருந்த பெடியள் ஷோட்ஸோட உள்ளுக்க போக வெளிக்கிட, அப்பிடி போக ஏலாது எண்டு கோயில் தரப்பில ஒராள் சொல்லியிருக்கு. அந்தநேரம் கோயிலுக்குள்ள ஜீன்ஸும், முழுக்கை ரீ ஷேர்ட்டும் போட்டபடி ஒராள் ஆதிமூலத்துக்கு கிட்ட நிண்டிருக்கிறார். 'ஜீன்ஸ், ரீ ஷேர்ட்டோட ஆதிமூலத்துக்கு கிட்ட ஆக்களைப் போக விட்டிட்டு எங்களுக்கு மட்டும் என்ன ரூல்ஸ்? எண்டு இவையள் திருப்பிக் கேட்டிருக்கினம். அவ்வளவுதான், அந்த ஜீன்ஸ் போட்டவர் கோபமா இவையிட்ட வந்திருக்கிறார்' நான் தான் கோயில் தர்மகர்த்தா. ஜீன்ஸோட கோயிலுக்குள்ள வரலாம். ஆனால் இதை மாதிரி ஜட்டியோட வரக்கூடாது எண்டு ஷோர்ட்ஸ் போட்டிருந்தவையைப் பார்த்து கத்தியிருக்கிறார். அவர் அப்பிடி கேவலமா கதைக்க, வெளிநாட்டால வந்து கோயிலுக்குப் போனவைக்கும் கோபமேற,அவையும் 'கோயிலெண்டால் எல்லாருக்கும் பொதுதானே' எண்டு நியாயம் கேட்டிருக்கினம். அவை அப்பிடிக் கேக்க கேக்க, தர்மகர்த்தாவுக்கு கோபம் உச்சத்துக்குப் போய் ஊஞ்சல் கட்டி ஆட வெளிக்கிட்டுட்டுது. அந்த வீறில அவர் ஓடிப்போய் பூசை நடந்து கொண்டிருந்த ஆதிமூலக் கதவை அடிச்சுப் பூட்டினார். அதுக்குப் பிறகும் ஆவேசம் அடங்கேலை. 'பொலிஸுக்கு கோல் பண்ணப் போறன்' எண்டு சொல்லிக் கொண்டே வெளிக்கதவையும் பூட்ட வெளிக்கிட்டிட்டார். கோயில் பூசைக்கு வந்து நிண்ட எல்லாரையும் வெளியிலயும் போகச் சொல்லிட்டார். சனங்களுக்கு என்ன செய்யிறதெண்டு தெரியேலை. பிறகு ஒருமாதிரி 'மனமிரங்கி' கதவைத் திறந்து. பூசை செய்ய விட்டிருக்கிறார். ஷோட்ஸோட வந்தவையையும், பிறகு கோயிலுக்குள்ள கும்பிடவும் விட்டவராம்.

கோயிலுக்குப் போகேக்க, வேட்டியோட இல்லாட்டி அதுக்குரிய உடுப்போட போகத்தான் வேணும், அப்பிடி போகாதது வெளிநாட்டால வந்தவையின்ர பக்கமுள்ள பிழை. ஆனால் தர்மகர்த்தா எண்டால் அவர்தான் கோயிலுக்கு வாறவைக்கு முன்மாதிரியா நடக்கவேணும். கோயிலுக்குள்ள ஜீன்ஸ், ரீஷேர்ட்டோட நிண்டுகொண்டு மற்றவையை ஆசாரமுறைப்படி வா எண்டு சொல்லுறதுக்கு தகுதியில்லையே. கோயிலுக்கு சனங்கள் ஷோட்ஸோட வரக்கூடாது எண்டால் , அதை மூண்டு மொழியிலையும் எழுதி அந்த அறிவித்தலை முன்பக்கம் வைச்சிருக்க வேணும். ஆனால் உந்தக் கோயிலில அப்பிடி ஒரு அறிவித்தலும் கண்ணிலும் தென்படவேயில்லை, அப்பிடி ஒரு அறிவித்தலை வைக்காமல் விட்டிட்டு, ஆக்கள் ஷோட்ஸோட வந்தால் தடுக்கிறது ஞாயமில்லை. அப்பிடியும் தடுக்கிறதெண்டால் பண்பாச் சொல்லி திருப்பி அனுப்பியிருக்கலாம். இல்லாட்டிக்கு நல்லூரிலயும், திருக்கேதீஸ்வரத்திலையும் செய்யிற மாதிரி ஷோட்ஸோட வாறவைக்கு கோயில்காரரே ஒரு வேட்டியைக் கட்டக் குடுத்து உள்ளுக்க விடலாம். என்ன தான் தனியுரிமைக் கோயில் எண்டாலும் இப்பிடி பூசை நடந்து, எல்லாரும் கும்பிட்டுக் கொண்டிருக்கேக்க ஆதிமூலக் கதவை அடிச்சுப் பூட்டுறது பிழையிலும் பிழை. அதைவிட ஒரு சிலர் ஷோட்ஸோட வந்திட்டினம் எண்டதுக்காக, அவையில உள்ள கோபத்துக்காக கும்பிட வந்த எல்லாரையும் வெளியில கலைக்கிறது பிள்ளையாருக்கே பிடிச்சிருக்காது. ஆமிக்காரரை வாயெல்லாம் பல்லாகி தேர் வடத்தை இழுக்கக் குடுக்கேக்க மட்டும், ஆசாரத்தை மறந்தவைக்கு, எங்கட சனம் கோயில் கும்பிடப் போகேக்கதான் அதுகள் நினைவு வரும் போல. சாமியள் கூட இப்ப ஆமிக்குத்தான் முன்னுரிமை குடுக்கினமோ?



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல்வெளியீடு

யாழ்ப்பாணம், ஜூலை 18

புலம்பெயர் எழுத்தாளர் என்.செல்வராஜா யாழ்ப்பாணம் பொதுநூலகம் தொடர்பாக எழுதிய 'யாழ்ப்பாணம் பொதுநூலகம்' மற்றும் 'றைசிங் ப்ரொம் த ஆஷஸ்' (Rising from the Ashes) ஆகிய இரு நூல்களின் வெளியீட்டு விழா இன்று செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ளது. யாழ்ப்பாணம் பொதுநூலகத்தின் ஏற்பாட்டில், யாழ். மாநகரசபை ஆணையாளர் த.ஜெயசீலன் தலைமையில் நூலகக் கேட்போர் கூடத்தில் மாலை 3 மணிக்கு நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. (ம-ரி2)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** உற்சாகமாகச் செயற்படும் நாள். தந்தை வழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும். சிலருக்கு அவ்வப்போது சிறுசிறு சலனங்கள் ஏற்பட்டு நீங்கும்.

**இடபம்:** இன்றைக்கு புதிய முயற்சிகளைத் தவிர்த்துவிடுவது நல்லது. சிலருக்கு நண்பர்கள் மூலம் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும். பணிச்சுமை அதிகரிப்பதால் சற்றுச் சோர்வு உண்டாகும்.

**மிதுனம்:** தெய்வ அனுகூலம் நிறைந்த நாளாக இருக்கும். மனதுக்கு மகிழ்ச்சி தரும் சம்பவம் நடைபெறும். பிள்ளைகளின் உற்சாகம் உங்களையும் தொற்றிக் கொள்ளும்.

**கடகம்:** செலவுகள் அதிகரிக்கும் நாள். என்றாலும் தேவையான பணம் கையில் இருப்பதால் சமாளித்துவிடுவீர்கள். சிலருக்கு தாய்வழி உறவுகளால் ஆதாயம் உண்டாகும்.

**சிம்மம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். உங்கள் யோசனையை குடும்பத்தினர் ஏற்றுக்கொள்வார்கள்.

**கன்னி:** பல வகைகளிலும் அனுகூலமான நாள். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதற்கு உகந்த நாள். ஆனாலும் பெரியவர்களின் ஆலோசனை அவசியம்.

**துலாம்:** உறவினர்கள் வருகையால் திடீர்ச் செலவுகள் ஏற்பட்டாலும் சமாளித்து விடுவீர்கள். உங்கள் முயற்சியில் எதிர்ப்புகளைக் கடந்து வெற்றி பெறுவீர்கள். உடல் ஆரோக்கியம் மேம்படும்.

**விருச்சிகம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. தந்தையின் தேவையைப் பூர்த்தி செய்து மகிழ்வீர்கள். எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் மறையும்.

**தனுசு:** இன்றைக்கு பதற்றம் தவிர்த்து எதிலும் நிதானமாகச் செயற்படவும். சிலருக்கு தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். சிலர் குடும்பத்துடன் வீட்டில் தெய்வ வழிபாடு செய்வீர்கள்.

**மகரம்:** தொடங்கும் காரியங்கள் வெற்றி பெறும். தேவையான பணம் கிடைக்கும். தாய்வழி உறவினர்கள் மூலம் ஆதாயம் கிடைக்கும். கணவன்– மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**கும்பம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும் நாள். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். தாயிடம் கேட்ட உதவி கிடைக்கும். உடல்நலனில் கவனம் தேவை.

**மீனம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். புதிய முடிவுகளைத் துணிந்து எடுப்பீர்கள். வாழ்க்கைத்துணையால் ஆதாயம் உண்டாகும். குடும்பத்தினர் உங்கள் யோசனைக்கு முக்கியத்துவம் தருவார்கள்.



### நிரந்தர நியமனம் கோரி

## டெங்குத் தடுப்புப் பணியாளர்கள் கைதடியில் நேற்றுப் போராட்டம்!

**யாழ்ப்பாணம், ஜூலை 18**

**வடமாகாண டெங்குத் தடுப்பு உதவியாளர்கள், வடக்கு மாகாணசபையின் பிரதம செயலாளர் அலுவலகத்துக்கு முன்பாக நேற்றுத் திங்கட்கிழமை போராட்டத்தில் ஈடுபட்டனர்.**

22 ஆயிரம் ரூபா ஊதியத்துக்காக தற்காலிகமாகப் பணியிணைப்புச் செய்யப்பட்ட டெங்குத் தடுப்புப் பணியாளர்கள், தமக்கு நிரந்தர நியமனத்தைக் கோரி நாடு தழுவிய ரீதியில் அண்மைக்காலமாகப் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். இதன் ஒரு பகுதியாகவே கைதடியில் பிரதம செயலாளர் அலுவலகத்துக்கு முன்பாக நேற்றும் அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

'அரசே டெங்குக் கள உதவியாளர்களை நிரந்தரமாக்கு', 'ஏழு வருடங்கள் கடந்தும் எமக்கு இல்லை நிரந்தர வேலை', '22,000 ரூபா ஊதியம் எமது வாழ்வாதாரத்துக்குப் போதுமா?' என்று எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர். வடக்கு மாகாணப் பிரதம செயலாளர் சமன் பந்துலசேனவை நேரடியாகச் சந்தித்து தமது கோரிக்கைகளடங்கிய மனுவையும் கையளித்தனர்.

போராட்டக்களத்துக்கு நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் நேரடியாகச் சென்ற நிலையில், அவரிடமும் மனுவொன்று கையளிக்கப்பட்டது. (ம-66)

## நடமாடும் சேவை!

யாழ்ப்பாணம், ஜூலை 18

வடமாகாண ஆயுள்வேத வைத்தியசபையால் மாகாணம் தழுவிய ரீதியில் நடமாடும் சேவைகள் நடத்தப்படவுள்ளன.

இதன்படி இன்று செவ்வாய்க்கிழமை காலை 8 மணி முதல் மதியம் 2 மணி வரை சிவபுரத்திலுள்ள வவுனியா ஆதார சித்த வைத்தியசாலையிலும், நாளை புதன்கிழமை காலை 8 மணி முதல் மதியம் 12.30 மணி வரை கிளிநொச்சி மாவட்ட சித்த வைத்தியசாலையிலும் மற்றும் பிற்பகல் 1.30 மணி முதல் மாலை 4 மணி வரை மன்னார் மாவட்ட சித்த வைத்தியசாலையிலும் (நறுவிலிக்குளம்), அதனைத் தொடர்ந்து நாளைமறுதினம் காலை 8 மணிமுதல்மாலை 3 மணிவரை யாழ்ப்பாணம் சித்த போதனா வைத்தியசாலையிலும் (கைதடி) நடமாடும் சேவைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

ஆயுள்வேத வைத்தியர்களின் பதிவுகளைப் புதுப்பித்தல், புதிய பதிவுகளுக்கான விண்ணப்பங்களை வழங்குதல், ஆயுள்வேத வைத்தியசபையின் இலச்சினையுடன் அச்சிடப்பட்ட சான்றிதழ்களை வழங்குதல் உள்ளிட்ட பல செயற்பாடுகள் இந்த நடமாடும் சேவையில் முன்னெடுக்கப்படவுள்ளன. (ம-18)

## யாழ். நகரத்தில் ஆடிப்பிறப்பு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 18

யாழ். மத்திய பேருந்து நிலையத்துக்கு முன்னால் அமைந்துள்ள, தங்கத் தாத்தா என அழைக்கப்படும் நவாலியூர் சோமசுந்தரப் புலவரின் சிலையருகே ஆடிப்பிறப்பு தின விழா நேற்றுக்காலை கொண்டாடப்பட்டது.

தங்கத் தாத்தா பேரவையின் ஏற்பாட்டில், ஓய்வுபெற்ற ஆசிரியர் கே.எஸ். சிவஞானராஜாவின் தலைமையில் இந்த நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது. இதன்போது தங்கத் தாத்தாவின் சிலைக்கு மலர் மாலை அணிவித்து, தங்கத் தாத்தா இயற்றிய 'ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே' என்ற பாடல் பாடி, சூடம் ஏற்றி ஆடிக்கூழ் பரிமாறி நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது. நவாலியூர் சோமசுந்தரப் புலவர் 15 ஆயிரத்துக்கும் அதிகமான பாடல்களை இயற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம -27,66)

## சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஜூலை 18

சைவ வாழ்வியலில் பெரியபுராணம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சிவஸ்ரீ பால.திருகுணானந்தக் குருக்கள் நடத்தும் வாராந்த பெரியபுராணச் சிறப்புச் சொற்பொழிவு சிறுப்பிட்டி அருள்மிகு ஸ்ரீ நாகதம்பிரான் ஆலய பிரதான மண்டபத்தில் எதிர்வரும் ஜூலை 21 ஆம் திகதி இடம்பெறவுள்ளது. சேக்கிழார் பெருமானின் குருபூஜையைத் தொடர்ந்து சொற்பொழிவை இளம்சைவப்புலவர் நித்திய பாபுதரன் 'தமக்குக் கிடைக்கும் பொருள்கள் யாவற்றையும் இறைவன் திருவமுதுக்கென்றே ஒதுக்கி வைத்த நாயனார்' என்னும் விடயப்பொருளில் ஆற்றவுள்ளார்.

✦ ✦ ✦

நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானம் நடத்தும் வாராந்த சிறப்புச் சொற்பொழிவு ஆலய சண்முக விலாச மண்டபத்தில் எதிர்வரும் ஜூலை 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் இடம்பெறவுள்ளது.

பரிபாலனசபைத் தலைவர் த. சோதிலிங்கத்தின் தலைமையுரையினைத் தொடர்ந்து சிறப்புச் சொற்பொழிவை இளம் சைவப்புலவர் ச.நவநீதன் 'பெரியபுராணம் ஒரு வாழ்வியல் வழிகாட்டி' என்னும் விடயப்பொருளில் ஆற்றவுள்ளார். (ம-ரி2)

## ஆலோசனை கருத்தரங்கு!

அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த அமைப்பின் ஒழுங்கமைப்பில் க.பொ.த. உயர்தரப் பரீட்சை எழுதி பல்கலைக்கழக அனுமதி பெறாதவர்களுக்கான கருத்தரங்கு எதிர்வரும் ஜூலை 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை கிளிநொச்சியில் நடைபெறவுள்ளது.

இந்தக்கருத்தரங்கில் பங்குகொள்வதன் மூலம் என்ன மாற்றுக் கல்வியைக் கற்கலாம் என்றும் எந்தத்துறையில் தொழில் வாய்ப்புகளைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் ஆலோசனைகள் வழங்கப்படவுள்ளன. மேலும் இதில் கலந்துகொள்பவர்களில் குறிப்பிட்ட தகுதிகளை உடைய இருவருக்கு உயர் கல்விக்கான புலமைப் பரிசில் வழங்கப்படும். (ம-ரி2)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## தடைகளின் நீடிப்பு புதிதல்ல!

ஈஸ்டர் தாக்குதலை அடுத்துத் தடைசெய்யப்பட்டிருந்த ஐந்து இஸ்லாமிய அமைப்புகள் மீதான தடை நீக்கப்பட்டிருக்கின்றது. ஈஸ்டர் தாக்குதலின் பின்னரான, புலனாய்வாளர்களின் தீவிர கண்காணிப்பு மற்றும் பரிசீலனைகளையடுத்தே இந்தத் தடைநீக்கம் செய்யப்பட்டிருக்கின்றது என்றும் அறிவிக்கப்பட்டிருக்கின்றது. பயங்கரவாதத் தாக்குதலுடன் தொடர்புண்டு என்ற சந்தேகத்தின் அடிப்படையில் ஓர் அரசாங்கத்தால் தடைவிதிக்கப்பட்டு மிகக்குறுகிய காலத்துக்குள்ளேயே அந்தத் தடை நீக்கப்பட்ட பட்டியலில் இந்த ஐந்து இஸ்லாமிய அமைப்புகளும் இணைந்துள்ளமை ஆச்சரியமே. ஏனெனில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதான அப்பாவித் தமிழர்கள் பலரும் 15, 20 வருடங்கள் கடந்தும் இன்னும் சிறைப்பறவைகளே. அதே போன்று, இஸ்லாமிய அமைப்புகள் மீதான தடையை நீக்கிய இலங்கை அரசால், சுமார் 15 வருடங்களுக்கு முன்னர் புலம்பெயர் தமிழ் அமைப்புகள் மீதான தடையை இன்னமும் நீக்க முடியவில்லையே. அது ஏன்?

ஈஸ்டர் தாக்குதல் இடம்பெற்று நீண்டகாலமல்ல. 2019ஆம் ஆண்டில் பீறிட்டு வெளிப்பட்ட இந்தக் கோரத்தாண்டவத்தின் கொடூரமுகம் இன்னமும் இலங்கையர்களின் மனங்களைவிட்டு அகலவில்லை. இறந்தோருக்கும், அங்கவீனமானவர்களுக்கும் நீதி இன்னமும் எட்டாக்கனியாகவே உள்ளது. தாக்குதலில் உயிரிழந்தோருக்கு நீதியைத்தாருங்கள் என்று கத்தோலிக்க திருச்சபையின் இலங்கைக்கான தலைவர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஏறாத இடமில்லை. இப்படியொரு பின்னணியில், தாக்குதலுடன் தொடர்புபடுத்தி தாம் சந்தேகம் கொண்ட அமைப்புகள் மீதான தடைகளை நீக்கும் அரசாங்கம், இறுதிப்போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட காலப்பகுதிகளிலும், அதற்கு முன்னரும்கூட தடைசெய்யப்பட்ட தமிழ் அமைப்புகள் மீதான தடைநீக்கத்தை இன்னமும் மறுபரிசீலனை செய்யவில்லை என்பது பேரபத்தமே.

ஐந்து வருடங்களுக்குள் இந்த அமைப்புகள் மீதான தடையை நீக்க முடிகின்றது என்றால் ஒன்றரைத் தசாப்தமாக நடைமுறையிலிருக்கும், ஈழத் தமிழர்கள் தொடர்பான – புலம்பெயர் அமைப்புகள் மீதான தடைகளை நீக்காதிருப்பதற்கு என்ன காரணம்? பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதான அப்பாவி இளையோரை ஏன் இன்னும் சிறைகளில் வைத்து வாட்டியெடுக்கின்றது? அரசாங்கத்தின் இத்தகைய தயக்கம்தான் இலங்கை பொருளாதாரத்தில் இன்று அதலபாதாளத்துக்குள் வீழ்ந்து கிடப்பதற்கு முதன்மைக்காரணம். இலங்கையின் பொருளாதாரம் மேம்படுவதற்காக, புலம்பெயர் தமிழர்கள் இலங்கையில் முதலிடவேண்டும் என்று மன்றாடிக் கொண்டிருக்கும் கொழும்பு, புலம்பெயர் தமிழர்கள் இங்கு முதலிடுவதற்கான நம்பிக்கையை அவர்களுக்கு வழங்குகின்றதா? என்ற தெளிவை முதலில் தனக்குத்தானே ஏற்படுத்திக்கொள்ளவேண்டும். தமிழர்கள் மீதான எந்தவொரு விடயத்தையும் மாற்றாந்தாய் மனப்பாங்குடன் அணுகிக்கொண்டு, பொருளாதாரத்தை மீட்டெடுக்க புலம்பெயர் தமிழர்கள் வரவேண்டும் என்று எதிர்பார்ப்பது 'இலவு காத்த கிளியின்' நிலைக்கு ஒப்பானதே அன்றி வேறில்லை.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள்சபையில், மதச் சுதந்திரத்தை வலியுறுத்தி பாகிஸ்தான் ஒரு தீர்மானத்தைக் கொண்டுவரவிருக்கின்றது. இந்தத் தீர்மானத்துக்கு இலங்கை இணை அனுசரணை வழங்கப்போகின்றது. பாகிஸ்தான் இஸ்லாத்தை முன்னிறுத்திச் செயற்படும் நாடு. ஈஸ்டர் தாக்குதலின் பின்னர் தடைநீக்கப்பட்ட இந்த ஐந்து அமைப்புகளும் மதத்தை முன்னிறுத்திச் செயற்பட்டவை. மத அமைப்புகளாகவே அவை அடையாளப்படுத்தப்படுகின்றன. அதனால் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள்சபையில் இலங்கை வழங்கவுள்ள இணை அனுசரணைக்கு இந்தத் தடைகள் இடையூறாக அமையலாம். எனவே இவற்றைக் கருத்திற்கொண்டு இந்தத் தடைகள் நீக்கப்பட்டிருக்கலாம். ஒரு விடயத்தை வெவ்வேறான கண்களால் நோக்குவது இலங்கைக்கு ஆரோக்கியமானதுமல்ல; புதிதுமல்ல.

நாளொரு நல்வார்த்தை

"மனிதனின் இதயத்தைத் திறப்பது எது? அவனை அறியாமல் எழும் சிரிப்புத்தான்"

– தோமஸ் கார்லைல்



## தொல்பொருள் சின்னங்களின் உருவங்கள் மாற்றப்படுகின்றன

### யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் சுட்டிக்காட்டு

**யாழ்ப்பாணம், ஜூலை 18**

**வரலாற்றுச் சின்னங்களின் இன்று உருவங்கள் மாற்றப்பட்டு வருகின்றன என்று யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் சிவபாலசுந்தரன் தெரிவித்துள்ளார்.**



நல்லூர் இராசதானியின் சங்கிலியன் தோரணவாயில் திறப்புவிழா நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிலையில், நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-
மரபுரிமைகளைப் பாதுகாப்பது என்பது முக்கியமானதும் அவசியமானதுமான பணியாகவுள்ளது. சமகால வரலாற்று நிகழ்வுகளை அது நிகழ்ந்த நாட்டிலே பேணிக்கொள்ள முடியாத நிலையில், அயல் நாட்டிலும் வெளிநாட்டிலும் நினைவகங்களை அமைத்துக்கொண்டிருக்கின்றாம்.
இன்றுள்ள சூழலில் வரலாற்றுச் சின்னங்களின் உருவங்கள் மாற்றப்படுகின்றன. அவற்றைப் பாதுகாக்க பகீரதப் பிரயத்தனம் மேற்கொள்ளப்படுகிறது. அண்மையில் காலி கோட்டையில் இருக்கும் அடையாளச் சின்னங்களைப் பார்வையிட்டேன் அங்கு நயினாதீவிலிருந்து கொண்டுசெல்லப்பட்ட கல்வெட்டொன்று காணப்பட்டது. அப்போது நாம் அதைப் பாதுகாக்கத் தவறிவிட்டோம் என எண்ணினேன்.
வீதியோரங்களில் காணப்படும் கட்டடங்கள், சுமைதாங்கிகள், ஆவுரஞ்சிக்கற்கள் போன்றன அபிவிருத்திகளின்போது அகற்றப்பட்டுவிட்டன. வரலாற்றுப் பாடப் புத்தகங்களில் எமது வரலாறு எமது சந்ததிக்கு எந்தளவு பொறிக்கப்படுகின்றது என்பது மிகமிக முக்கியமானது - என்றார். (ம-27)

## நவீனமாகிறது தபால்துறை

தபால் துறையை நவீனமயப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன் ஒரு கட்டமாக தபால் துறைக்கு ஓட்டோக்களை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
இது தொடர்பில் தபால் மற்றும் வெகுசனத்தொடர்பு பிரதியமைச்சர் சாந்த பண்டார தெரிவித்ததாவது: தபால் திணைக்களத்தை நவீனமயப்படுத்தும் திட்டத்தின் கீழ் தபால்காரர்களுக்கு ஓட்டோக்கள் வழங்கப்படவுள்ளன. இதற்கு பத்து பில்லியன் ரூபா தேவைப்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது. அரசதனியார்துறை பங்களிப்புடன் தபால் திணைக்களம் இவ்வருட இறுதிக்குள் நவீனமயப்படுத்தப்படவுள்ளது. ஆனால், எக்காரணம் கொண்டும் தபால்துறை தனியார் மயப்படுத்தப்படாது - என்றார். (ம-6)

## அரபுக்கல்லூரி ஒன்றில் சட்டவிரோத கொல்களம்

### பதுளையில் அதிர்ச்சி

கொழும்பு, ஜூலை 18
பதுளையிலுள்ள அரபுக்கல்லூரி ஒன்றில் அமைக்கப்பட்டிருந்த சட்ட விரோதக் கொல்களம் அடையாளம் காணப்பட்டுள்ளது.
அந்தக் கல்லூரிக் கொல்களத்தில் வைத்துச் சட்ட விரோதமாக மாடுகள் இறைச்சியாக்கப்பட்டமை அவதானிக்கப்பட்டுள்ளது. இந்தக் கொல்களத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர். (ம-6)

நாளை

19.07.2023
புதன்கிழமை
ஆடி 03

சுபநேரம் : 04.31 – 06.01
ராகுகாலம் : 12.01 – 01.31

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்னர் படையின் தலைவர் கொலை?



## காணவில்லை என்று பெலாரஸ் அறிவிப்பு

**மொஸ்கோ, ஜூலை 18**

**ரஷ்ய அரசுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்யப்போவதாக அறிவித்த, வாக்னர் குழுவின் தலைவர் பிரிகோசினைக் கடந்த சில நாள்களாகக் காணவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் அவரை ரஷ்யா கொன்றிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது. அவரைக் காணவில்லை என்பதை பெலாரஸ் உறுதிப்படுத்தியுள்ளது.**

ரஷ்யாவின் துணை இராணுவக் குழுக்களாகக் கூலிப்படைகள் உள்ளன. இவை ரஷ்ய இராணுவத்துடன் இணைந்து செயற்பட்டு வருகின்றன.

உக்ரைன் போரில் 'வாக்னர்' என்று அறியப்படும் கூலிப்படையின் செயற்பாடு ரஷ்யாவின் ஆரம்பநாள் எழுச்சியின் பெரும் பங்காற்றியது. அதன் பின்னரும் வாக்னர் படைகள் ரஷ்ய இராணுவத்துடன் இணைந்து உக்ரைனை எதிர்த்து வந்தன.

எனினும், கடந்த சில நாள்களுக்கு முன்னர், ரஷ்ய இராணுவத்துக்கும் வாக்னர் படைக்கும் இடையே கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டன. ரஷ்ய இராணுவம் தனது சிப்பாய்களையும் இலக்குவைத்துத் தாக்குகின்றது என்றும் தனக்கு இராணுவத் தளபாடங்களை வழங்கவில்லை என்றும் தெரிவித்த வாக்னர் படை, ரஷ்ய இராணுவ அமைச்சரைப் பதவி விலகுமாறு வலியுறுத்தியதுடன், ரஷ்ய இராணுவத் தலைமையைக் கைப்பற்றப்போவதாகவும் அறிவித்து கிளர்ச்சியில் ஈடுபட்டது.

இதையடுத்து இந்த விவகாரத்தில் ரஷ்யாவில் நெருங்கிய நட்பு நாடான பெலாரஸ் தலையிட்டு, இரு தரப்புக்கும் இடையில் சமரசத்தை ஏற்படுத்தியதுடன், வாக்னர் படைத் தலைவருக்கு பெலாரஸில் அடைக்கலம் கொடுக்கவும் முன்வந்தது.

இந்த நிலையிலேயே வாக்னர் படைத்தலைவரைக் காணவில்லை என்று தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது. வாக்னரைக் கொல்வதற்காக புடின் திட்டமிட்டுள்ளார் என்றும், இதற்காகவே அவரை பெலாரஸுக்குள் அனுப்பிவைத்துள்ளார் என்றும் முன்னதாகப் பல தரப்பினரும் சந்தேகம் வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது. (ம)

# அலஸ்காவில் நிலநடுக்கம்!

வொஷிங்டன், ஜலை 18

அமெரிக்காவின் அலஸ்கா பகுதியில் நேற்று நிலநடுக்கம் உணரப்பட்டுள்ளது. கடலுக்கு அடியில் மையம் கொண்ட இந்த நிலநடுக்கத்தின் தாக்கம் 7.4 ரிக்டர் அளவுகளாகப் பதிவானது.

உலகில் அதிகம் எரிமலை வெடிப்புகள் மற்றும் நிலநடுக்கங்கள் ஏற்படக் கூடிய 'பசுபிக் நெருப்பு வளையம்' என்ற பகுதியின் ஓர் அங்கமாக அலாஸ்கா உள்ளது. கடந்த 1964ஆம் ஆண்டு மார்ச் மாதம், அலாஸ்காவில் 9.2 ரிக்டர் அளவிலான மிகப்பெரிய நிலநடுக்கம் ஏற்பட்டது.

இதுவரை வட அமெரிக்காவில் ஏற்பட்ட மிகப்பெரிய நிலநடுக்கம் இதுவே. இந்த நிலநடுக்கத்தைத் தொடர்ந்து அலாஸ்கா வளைகுடா, அமெரிக்காவின் மேற்குக் கடற்கரை மற்றும் ஹவாய் ஆகிய பகுதிகள் பெரும் சுனாமிப் பேரழிவைச் சந்தித்தமை குறிப்பிடத்தக்கது. (ம)





# ஆயிரத்து 600 லீற்றர் தாய்ப்பால் தானம்!

## அமெரிக்கப் பெண் சாதனை

வொஷிங்டன், ஜூலை 18

அமெரிக்காவின் ஓரிகான் பகுதியைச் சேர்ந்த பெண்ணொருவர் சுமார் ஆயிரத்து 600 லீற்றர் தாய்ப்பாலைத் தானமாகக் கொடுத்து கின்னஸ் சாதனை படைத்துள்ளார்.

எலிசபெத் சியாரா என்ற அந்தப் பெண், ஹைப்பர்லாக்டேஷன் என்ற நோயால் பாதிக்கப்பட்டுள்ளார். இதனால் அவருடைய உடல் நாளொன்றுக்கு 6.65 லீற்றர் தாய்ப்பாலை உற்பத்தி செய்கின்றது. தனது தாய்ப்பால் வீணாகப் போவதை விரும்பாத சியாரா, தாயை இழந்த பச்சிளம் குழந்தைகளுக்கு உதவ முன்வந்து இதுவரை சுமார் ஆயிரத்து 600 லீற்றர் தாய்ப்பாலைத் தானமாகக் கொடுத்துள்ளார். (ம)

# வடகொரியா மீண்டும் ஏவுகணைச் சோதனை

பியாங்யாங், ஜூலை 18

வடகொரியா 'ஹ்வாசோங்18' என்ற கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணைச் சோதனையை வெற்றிகரமாக பரிசோதித்துள்ளது.

'ஹ்வாசோங்18' சோதனை வெற்றிகரமாக முடிந்ததைக் கண்ட அதிபர் கிம் வெள்ளை உடையில் மகிழ்ச்சியாகக் கைதட்டிய ஒளிப்படங்கள் வைரலாகி வருகின்றன. இந்தப் புதிய ஏவுகணை ஆகாயத்தில் 74 நிமிடங்கள் பயணித்து இலக்கை அடைந்தது. ஆகாயத்தில் நீண்ட நேரம் பயணிக்கும் வடகொரியாவின் ஏவுகணையாக இது கருதப்படுகிறது.

அமெரிக்கா தென்கொரியப் படைகள் கொரிய தீபகற்பத்தில் கடந்த சில மாதங்களாகவே இராணுவப் பயிற்சிகளை மேற்கொண்டு வருகின்றன.

மேலும், இரு நாடுகளும் மிகப்பெரிய இராணுவப் பயிற்சிக்குத் திட்டமிட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த நிலையில்தான், வடகொரியா தொடர்ந்து ஏவுகணைச் சோதனைகளை நடத்தி வருகின்றது. (ம)



# உக்ரைன் மீது கடும் தாக்குதல்

மொஸ்கோ, ஜூலை 18

உக்ரைனுக்கு எதிரான தாக்குதல்களை ரஷ்யா தீவிரப்படுத்தியுள்ளது என்று சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

நேட்டோ நாடுகளில் மாநாடு அண்மையில் லித்துவேனியாவில் நடைபெற்றது. உக்ரைனின் அதிபர் ஷெலன்ஸ்கியும் இந்த மாநாட்டில் கலந்துகொண்டார். இதற்கு தாக்குதல்களை நடத்தி கடும் எதிர்வினை ஆற்றியிருக்கின்றது ரஷ்யா.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த, ரஷ்ய வெளியுறவுத்துறை அமைச்சர் செர்ஜி லாரோவ், 'மேற்குலக நாடுகள் ரஷ்யாவைத் தோற்கடிக்கும் முயற்சியை நிறுத்தும் வரை உக்ரைன் உடனான போரை நிறுத்த மாட்டோம்' என்று தெரிவித்துள்ளார். (ம)



# பிரபஞ்சத்தின் வயதில் விஞ்ஞானிகள் குழப்பம்

வொஷிங்டன், ஜூலை 18

பிரபஞ்சத்தின் வயது முந்தைய ஆய்வுகளின் படி கணிக்கப்பட்டதைவிட இரண்டு மடங்கு அதிகமானதாக இருக்கலாம் என்று சமீபத்திய ஆய்வு ஒன்றில் தெரியவந்துள்ளது.


இந்தக் கண்டுபிடிப்பு பிரபஞ்சத்தின் வயதை மதிப்பிடுவதற்கு பயன்படுத்தப்படும் தற்போதைய பிரபஞ்சவியல் மாதிரிக்கு சவாலாக அமைந்துள்ளது.

கடந்த காலங்களில், விஞ்ஞானிகள் எமது பிரபஞ்சத்தின் வயதை 'பிக் பேங்' எனப்படும் பெருவெடிப்பிலிருந்து காலத்தை அளவிடுவதன் மூலமும், தொலைதூர விண்மீன் திரள்களிலிருந்து ஒளியின் சிவப்பு மாற்றத்தின் மூலம் பழமையான நட்சத்திரங்களை ஆய்வு செய்வதன் மூலமும் மதிப்பிட்டு வந்தனர். கடந்த 2021ஆம் ஆண்டில், தற்போது நடைமுறையில் உள்ள லாம்ப்டாசிடிஎம் ஒத்திசைவு மாதிரியின் மூலம் பிரபஞ்சத்தின் வயது 13.797 பில்லியன் ஆண்டுகள் என விஞ்ஞானிகள் மதிப்பிட்டனர்.

ஆனால், ஏற்கெனவே கணக்கிடப்பட்ட பிரபஞ்ச வயதை விட மிகப் பழமையானதாகக் கருதப்படும் மெதுசெலா போன்ற விண்மீன்களையும் மற்றும் மேம்பட்ட பரிணாம நிலைகளுடன் கூடிய ஆரம்பகால விண்மீன்களையும் ஜேம்ஸ் வெப் தொலைநோக்கி கண்டுபிடித்துள்ளது விஞ்ஞானிகளைக் குழப்பத்தில் ஆழ்த்தியுள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி கல்மடுக்குள காட்டுக்குள் தீ பரவல்!



**கிளிநொச்சி, ஜூலை 18**

**கிளிநொச்சி கல்மடுக்குளத்தின் பிற்பகுதியி லுள்ள காட்டுக்குள் தீ பரவி வருகின்றது. இது தொடர்பில் வனப்பாதுகாப்புத்துறை யினருக்குத் தெரி விக்கப்பட்டுள்ளது.**

கிளிநொச்சி மாவட்டத்தின் பிரதான குளங்களில் ஒன்றா கக் கல்மடுக் குளம் காணப்ப டுகின்றது.

இந்தக் குளத்தின் பிற்பகுதி யில் காணப்படும் காட்டுக் குள் கடந்த இரண்டு நாள்க ளாகத் தீ பரவி வருகின்றது.

இது தொடர்பில் வனத்துறை யினருக்குத் தகவல் வழங்கப் பட்டுள்ளது.

தீ பரவலால் பல பெறுமதி யான மரங்கள் தீயில் எரிந்து சாம்ப லாகியுள்ளன. சில பகுதிகளில் பெரும் மரங்கள் முறிந்து விழக் கூடிய சாத்தி யம் காணப்படுகின்றது என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள் ளது. (ம-113)


**33 ஆம் ஆண்டில்......**
எமது கல்வி நிறுவனத்துக்கு...

**ஆசிரியர் தேவை**

தமிழ் :- தரம் - 6, 7, 8, 9, 10, 11
ஆங்கிலம் :- தரம் - 6, 7, 8, 9, 10, 11

**077 740 4883**
(கொக்குவில் மேற்கு) (CS/51300) AH-1



## ஆலயத்துக்கு குருக்கள் தேவை

**அல்வாய் வேவிலந்தை ஸ்ரீ முத்துமாரி அம்மன்** ஆலயத்துக்கு குருக்கள் தேவைப்படுவதால் வர விரும்புவோர் ஆலய நிர்வாகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**077 604 7786** (24726)AH-1



## பெயர்மாற்றம்

அரசடி வீதி, கட்டுடை, மானிப்பாயில் வசிக்கும் **இராசநாயகம் குணசேரன்** ஆகிய நான் எனது பெயரை இன்றுமுதல் **இராசநாயகம் குணசேகரன்** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **இராசநாயகம் குணசேகரன்** என்றே கையொப்பமிடுவேன் என இலங்கை சோசலிசக் குடியரசு மக்களுக்கு அறியத் தருகின்றேன்.

(CS/51285)AH-1 **- இராசநாயகம் குணசேகரன்**



## பெயர்மாற்றம்

நீர்வேலி மேற்கு, நீர்வேலியில் வசிக்கும் **துரைராஜா பகமாபதி** ஆகிய நான் எனது பெயரை **துரைராஜா பத்மாவதி** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **துரைராஜா பத்மாவதி** என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை சோசலிச குடியரசு மக்களுக்கு உறுதிப்படுத்துகின்றேன்

(CS/51282)AH-1 **- துரைராஜா பத்மாவதி -**



## பாராட்டி வாழ்த்துகிறோம்



**யாழ்/ கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியால ஆரம்பப் பிரிவிற்குரிய விளையாட்டு மைதான திறப்புவிழா 16.07.2023** அன்று இடம்பெற்றவேளை மைதானத்துக்குரிய **காணியை அன்பளிப்பாக** வழங்கிய பிரபல சமூக சேவையாளரும் கல்விக் கொடையாளருமாகிய **கலாநிதி இராசையா குவேந்திரநாதன்** அவர்கள் பாடசாலைச் சமூகத்தினரால் **"தண்ணளி வேந்து"** என்னும் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டமையைப் பாராட்டுவதோடு அவர்களின் சேவை மென்மேலும் தொடர நாமும் அவர்களை வாழ்த்துகின்றோம்.

**உரிமையாளரும், ஊழியர்களும்**
**டொட் லைன் கலர் லாப்**
**96/ யாழ்.வீதி, யாழ்ப்பாணம்.**


# வடமாகாணத்தில் சீரான காலநிலை

வடக்கு மாகாணத்தில் இன்று சீரான காலநிலை நிலவும் என்று இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்தத் திணைக் களம் விடுத்துள்ள ஊடக அறிக் கையில் உள்ளதாவது:-

நாட்டில் மேல், சப்ரகமுவ மற்றும் வடமேல் மாகாணங்களிலும் கண்டி, நுவரெலியா, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகின் றது. அத்துடன், ஊவா மாகாணத் திலும் அம்பாறை மற்றும் மட்டக்க ளப்பு மாவட்டங்களிலும் சில இடங் களில் மாலை அல்லது இரவு வேளைகளில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூ டிய சாத்தியம் காணப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழையின்போது தற்காலிகமாக பலத்த காற்று மற் றும் மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ளப் போதுமான முன்னெச்சரிக்கை நடவடிக்கை களை எடுக்குமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள் - என் றுள்ளது. (ம)

# இரண்டாம் மொழிக்கற்கை சுழிபுரத்தில் ஆரம்பம்!

யாழ்ப்பாணம், ஜூலை 18

இலங்கை அஞ்சல் திணைக் களத்தின் கூட்டுறவு சமூக பொறுப்புத் திட்டத்தின் கீழ், இரண்டாம் மொழிக்கற்கை சுழிபுரம் பிரதான தபாலகத் தில் இலங்கை அஞ்சல் மா அதிபர் ருவான் சத்குமாரவி னால் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மாணவர்களிடையே இரண்டாம் மொழியான சிங்களம் மற்றும் ஆங்கிலக் கற்கைநெறிகளை வளர்த்தெடுக்கும் முகமாக குறித்த செயற்றிட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

தொடர்ச்சியாக அஞ்சலகத்தின் நிலைமைகள் குறித்தும் தபால்மா அதிபர் கலந்துரையாடி னார்.

வடக்கு அஞ் சல்மா அதிபர் திருமதி மதுமதி வசந்தகுமாரி, யாழ். மாவட்ட அஞ்சல் அத்தியட் சகர் எஸ்.ஏ.டி. பெர்னாண்டோ, முத்திரை பணிய கப் பணிப்பாளர் லங்காதி சில்வா, நுண்ணாய்வுப் பரிசோதகர்கே. செந்தில்குமார், சுழிபுரம் தபாலக அதிபர், உத்தியோ கத்தர்கள், மாணவர்கள் என பலரும் நிகழ்வில் கலந்து கொண்ட னர். (ம-125)


**யாழ் வீரசிங்க மண்டபத்தில்**
**இன்றுமுதல் 15.07.2023 - 06.08.2023 வரை**

## ஆடி மாத ஆடை தள்ளுபடி

**ஆண்கள் மற்றும் பெண்களுக்கான தலை சிறந்த ஆடைகள்**



திருமணப்பட்டுச் சாறிகள்
கொட்டன் சாறிகள்
சல்வார்கள்
சல்வார் துணிகள்
புத்தம் புது டொப் வகைகள்
மற்றும் சிறுவர் சிறுமிகளுக்கான ஆடை தெரிவுகள்.....

இது பிரமாண்ட ஜவுளித் துறையின் சாம்ராஜ்யம்

## இந்தியன் செலக்ஷன்

**காலம்: 15.07.2023 - 06.08.2023**
வீரசிங்க மண்டபம் -யாழ்ப்பாணம்
(ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குருதித்தானம்



'விதையனைத்தும் விருட்சமே' குழுமம் அமரர். நாகலிங்கம் தெய்வேந்திரத்தின் இரண்டாம் ஆண்டு நினைவாக நடத்திய மாபெரும் குருதித்தானமுகாம் கடந்த 16ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை யாழ். போதனா மருத் துவமனை குருதிவங்கிப் பிரிவில் நடைபெற்றது.

(ய-66)

# ஐ.எம்.எப்.பின் 33 நிபந்தனைகளை நிறைவேற்றியுள்ளது இலங்கை!

## 8 உறுதிமொழிகள் கிடப்பில்

கொழும்பு, ஜூலை 18

இந்த ஆண்டு ஜூன் மாத இறுதியில் சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளில் 33 நிபந்த னைகளை இலங்கை அரசாங்கம் நிறைவேற்றி யுள்ளது. எனினும் 8 நிபந்தனைகளை நிறைவேற் றத் தவறியுள்ளது என்று வெரிட்டே ரிசேர்ச் அமைப் பின் ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் வெளியிடப்பட்ட அறிக்கையில் மேலும் உள்ளதாவது:

தோல்வியுற்ற உறுதிமொழிகளின் எண்ணிக்கை மே மாதத்தில் 4ஆகக் காணப்பட்டது. இது ஜூன் மாதத் துக்குள் 8ஆக இரட்டிப்பாகியுள்ளது. அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களின் மறுசீரமைப்புத் திட் டத்துக்கு அமைச்சரவை ஒப்புதல் பெறுதல், புதிய ஊழல் எதிர்ப்புச் சட்டங்களை இயற்றுதல், 2022 ஆம் ஆண்டுக்கான 52 அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களின் ஆண்டறிக்கைகளை வெளியிடு தல் மற்றும் இறக்கு மதிக் கட்டுப்பாடுகளைப் படிப்ப டியாக நீக்குவதற்கான திட்டத்தை உருவாக்குதல் ஆகியவை இதில் உள்ளடங்கும்.


சட்டங்களை இயற்றுதல் மற்றும் தகவல்களைப் பரப்புதல் ஆகிய இரண்டு விடயங்களில் இலங்கை பெருமளவில் தோல்வியடைந்துள்ளது.

மார்ச் - ஜூன் மாதங்களுக்கு இடையில் பந்தயம் மற்றும் சூதாட்ட வரிகளில் திருத்தம் செய்தல், இலங்கை மத்திய வங்கிச் சட்டம் மற்றும் புதிய ஊழல் எதிர்ப்புச் சட்டத்தை அமுல்படுத்துதல் ஆகிய மூன்று முக்கியமான சட்டங்களை இயற்றுவதற்கு நாடு உறு தியளித்துள்ளது.

இந்த மசோதாக்கள் தொடர்பான வரைவுகள் முறையே 2023 ஏப்ரல் 4, மார்ச் 7 மற்றும் ஏப்ரல் 27 ஆகிய திகதிகளில் அரசாங்க அச்சுத் திணைக் கள இணையத்தளத்தில் வெளியிடப்பட்டன. எனி னும், இந்த வரைவுகள் இன்னும் நாடாளுமன்றத் தால் அங்கீகரிக்கப்பட்டு நடைமுறைக்குக் கொண் டுவரப்படவில்லை - என்றுள்ளது. (ம-இ)

## மரண அறிவித்தல்

பிறப்பு 01 . 08 . 1959



இறப்பு 17 . 07 . 2023

### விநாசித்தம்பி சபாநாயகராசா

(ஓய்வு பெற்ற பணச்சீட்டு பரிசோதகர், CTB)

ஒட்டுவெளி மிருசுவிலை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட விநாசித்தம்பி சபாநாயகராசா நேற்று (17.07.2023) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார்' காலஞ்சென்ற விநாசித்தம்பி சின்னத்தங்கம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்கான நடராசா, சிங்கராசா,தியாகராசா மற்றும் செல்வராணி, அம்பிகாபதி, யோகம்மா ஆகியோரின் பாசமிகு சகோதரரும், காலஞ்சென்ற சுகிர்தமலரின் அன்புக் கணவரும், பிரசன்னா, பிரவீனா, பிரமிளா, தர்ஷன், ஆகியோரின் தந்தையும், லக்ஷன், நிர்மலன் (ரூபின்), நிலூயா ஆகியோரின் மாமனாரும், அஷான், கேவோன், நெகேமியா, ஷாமுவேல், ஆகியோரின் பேரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.07.2023) செவ்வாய்க்கிழமை WHITE HOUSE 180, பிரதான வீதி, யாழ்ப்பாணம், எனும் முகவரியில் நடைபெற்று பிற்பகல் 1.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் .இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஒட்டு வெளி, மிருசுவில். 077 436 3547

தகவல்: குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## திரு. சிதம்பரப்பிள்ளை சின்னத்துரை



பிறப்பு 15.03.1944 இறப்பு 17.07.2023

தென்மராட்சி, உசன் கந்தசாமி கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திரு. சிதம்பரப்பிள்ளை சின்னத்துரை நேற்று (17.07.2023) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை - கதிராசிப் பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை - செல்லாச்சி தம்பதிகளின் பாசமிகு மருமகனும், காலஞ்சென்ற அன்னலட்சுமி (பரமேஸ்) யின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற கனகம்மா, வினாசித்தம்பி, சின்னம்மா, சிவகுரு, நல்லதம்பி, திருப்பதி ஆகியோரின் அன்புச் சகோதரனும், நிறஞ்சிலா (நிறஞ்சி - லண்டன்), கிருபராஜா (கிருபா - கனடா), கோகுலராஜ் (செந்தூர் - லண்டன்), நிருபனா (நிரு - லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ் சென்ற சுதாகரன் (நிசாந்தன்) மற்றும் பாலதர்சினி (கனடா), காயத்ரி (லண்டன்), சுதாகர் (லண்டன்) ஆகியோரின் மாமனா ரும், அஷ்ணவி (லண்டன்), லவீனா (கனடா), லக்ஷனா (கனடா), கேஷிகா (லண்டன்), அபிமன்யு (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.07.2023) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஈச்சங்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உசன் கந்தசாமி கோயில், மிருசுவில்.

தகவல்: குடும்பத்தினர்.

(CS/51299)AH-1

077 348 4322, 00164 722 33142

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## பருத்தித்துறை மேலைப்புலோலி ஆலடிபிள்ளையார் ஆலயத்தின் ஆதனம் தொடர்பான உடமையாக்கற் கட்டளை (vesting order) பற்றிய அறிவித்தல்

### பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம்

நம்பிக்கை பொறுப்புச்
சட்டத்தின் 112ம் பிரிவின்
கீழான விண்ணப்பம்
பாலசுப்பிரமணியம் பாலச்சந்திரன்
72, 1/1 தக்சிணாராம றோட், கல்கிசை

- மனுதார்.

**வழக்கு இல:** TR/191/23
**வழக்கின் தன்மை:** நம்பிக்கைப் பொறுப்பு
**நடைமுறை:** சுருக்கமுறை
**பெறுமதி:** 5 மில்லியன்

எதிர்

1. கனகசபை சிவகுமார்
முகாமையாளர்
விடுதி வீதி
புலோலி மத்தி
பருத்தித்துறை

2. சிவசுப்பிரமணியம் சிவகுமார்
பொருளாளர்
வடலித்தோட்டம்
புலோலி மத்தி
தம்பசிட்டி பருத்தித்துறை

3. சபாபதிப்பிள்ளை தங்கராஜா
மணல் ஒழுங்கை
புலோலி மேற்கு
பருத்தித்துறை

4. கந்தப்பு தங்கராஜா
(தலைவர்)
தென்னிங்கவத்தை
புலோலிமேற்கு
பருத்தித்துறை

5. கனகசபை ராஜ்குமார்
சாளம்பை புலோலி மேற்கு
பருத்தித்துறை

- எதிர்மனுதாரர்கள்.

இதன் கீழ் ஆதன அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஆதனம் காலஞ்சென்ற கதரிதம்பி சுப்பிரமணியம் பாலசுப்பிரமணியத்தின் மகனாகிய பாலச்சந்திரன் என்பவருக்கு சந்ததி வழியாய் நம்பிக்கை பொறுப்பாளராகவும், முகாமையாளராகவும், யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்ற வழக்கு இல: 22161 மூலம் நியமிக்கப்பட்ட, மேலைப்புலோலி ஆலடிபிள்ளயையார் ஆலயத்தின் வகைக்காக தர்ம நன்கொடை செய்யப்பட்ட ஆதனம் நெடுங்குளவெளித்தெனி ஆகும்.

மேலைப்புலோலி ஆலடிபிள்ளையார் ஆலயத்தின் இவ் ஆதனம் தொடர்பில் நம்பிக்கைச் சொத்து உடைமை எவரிடம் உள்ளது என்பது குறித்து நிலையற்ற தன்மை தோன்றியுள்ளது.

மேலைப்புலோலி ஆலடிபிள்ளையார் ஆலயத்தின் இதன் கீழ் ஆதன் இடாப்பில் விபரிக்கப்படும் தரும் சொத்தினை ஆலயத்தின் வகைக்காக நிர்வாகம் செய்ய நம்பிக்கை பொறுப்பாளரான ஆலடிபிள்ளையார் ஆலய அதன் உடன் தொடர்புபட்ட ஆதனாங்களுக்கும் நம்பிக்கை பொறுப்பாளராகவும், முகாமையாராகவும் நியமிக்கப்பட்டமையால் அதன் வகைக்காய் ஓர் உடைமயாக்கற் கட்டளை (vesting order) பெறும் நோக்கில் பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு இலக்கம் நம்பிக்கைச் சொத்து/ 191/ TR/ 2023 எனும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு உடைமையாக்கற் கட்டளை (vesting order) பெறுவது தொடர்பில் பத்திரிகையில் விளம்பரப்படுத்துமாறு கௌரவ மன்று கட்டளை இட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் மேற்குறித்த ஆலடிபிள்ளயையார் ஆலய மனு தாரரருக்கு குறித்த கீழே ஆதன அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள மேலைப்புலோலி ஆலடிபிள்ளையார் ஆலயத்தின் வகைக்காக திரஸ்தி நியமன ஊறுதியின் படி உள்ள ஆதனம் தொடர்பில் ஓர் உடைமையாக்கற் கட்டளை (vesting order) வழங்கப்பட கூடாது என ஆட்சேபனை ஏதும் இருப்பின் குறித்த உடையாக்கற் கட்டளை ஏன் வழங்கப்படலாகாது என்பதற்கு மன்றினால் ஏற்றுக்கொள்ளக்கூடிய தகுந்த காரணங்களை கௌரவ பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றின் முன் 10.08.2023 ஆம் திகதி முற்பகல் 9.00 மணிக்கு பிரசன்னமாகி உங்கள் தரப்பு ஆட்சேபனையினைத் தங்களது சட்டத்தரணி ஊடாக முன்வைக்குமாறு இத்தால் நீர் கோரப்படுகின்றீர்கள்.

**ஆதன அட்டவணை 1**

வடமாகாணம் யாழ் மாவட்டம் வடமராட்சி பகுதி பருத்தித்துறை கோயிற் பற்று புலோலி மேற்கு மழவராயன் குறிச்சியிறை நெடுங்குளவெளித்தெனி வடகிழக்கில் நடுவும் தென்கிழக்கில் மேற்கும், தெற்கும், 1928 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 25 ஆந் திகதி உலாந்தா மேஸ்தர் க.வேல்முருகுவால் 834 ஆம் இலக்கத்தில் விந்தாரிக்கப்பட்ட படத்தின்படி நிலப்பரப்பு 54 குழி 15 1/4 கோயில் கட்டடங்களின் மடப்பள்ளி, கிணறு, கற்குளம் மடம் இன்னும் இதைச் சேர்ந்தவைகள் அனைத்தும் எல்லை கிழக்கு ஒழுங்கையும், உவெஸ்லியன் மிசனுக்குரிய ஆதனமும் வடக்கு கிருஸ்ணபிள்ளை மயில்வாகனத்திற்கும் கனகரத்தினம் சுப்பிரமணியத்திற்கும் மறுபெயருக்குமுடைய ஆதனமும் தண்ணீர் வாய்க்காலும், கதிரித்தம்பி சுப்பிரமணியத்தின் உரிமைக்காரருக்குரிய ஆதனமும், மேற்கு ஒழுங்கை தெற்கு உவெஸ்லியன் மிசனுக்குரிய ஆதனமும் விசுவநாதன் கனகரத்தினத்தின் உரிமைக்காரருக்கு மறுபேருக்குமுரிய ஆதனமும் இவ்வெல்லைக்குட்பட்டவைகள் அடங்கலும்.

**ஆதன அட்டவணை 2**

4693 ஆம் இலக்க 09.08.1922 ஆம் திகதிய மு.சு.கந்தையா பிரசித்த நொத்தாரிசு முகதாவில் நிறைவேற்ற தர்மசாதன உறுதியின் ஆதன அட்டவணை

நீதிமன்ற உத்தரவுப்படி

பதிவாளர்
மாவட்ட நீதி மன்றம்
பருத்தித்துறை.

**வரைவு:**
**மனுதாரரின் பதிவு செய்யப்பட்ட சட்டத்தரணி.**

---

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



தோற்றம்
10 . 06 . 1954

மறைவு
19 . 06 . 2023

கடந்த 19.06.2023 திங்கட்கிழமை சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர்

## அமரர் சேனாதிராஜா இரத்தினராஜா

அவர்களின் அந்தியேட்டி வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை (19.07.2023) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல.20, இந்துமகளிர் ஒழுங்கை,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.


குடும்பத்தினர்
077 349 2620

(CS/51296)AH-1

---

# மரண அறிவித்தல்

மண்ணில்
07 . 05 . 1980



விண்ணில்
17 . 07 . 2023

## குணசேகரம் குணதீபன்

பத்திரகாளிகோவிலடி வண்ணார்பண்ணையை பிறப்பிடமாகவும் சபாபதிலேன் தலையாளியை வசிப்பிடமாகவும் கொண்ட குணசேகரம் குணதீபன் நேற்று (17.07.2023) திங்கட்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குணசேகரம் தங்கேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற மகாலிங்கம் மற்றும் கமலாம்பிகை தம்பதியரின் அன்பு மருமகனும், சாமந்திப்பிரியாவின் அன்புக் கணவரும், ஆகீசன், சுகிலயா, சரண்யா ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற குணதாசன் மற்றும் குணேஸ்வரி, யசிந்தன், மணிவண்ணன் ஆகியோரின் அன்பு சகோதரனும், பிரதீப், தர்சிதா, சத்தியசீலன், சசிகலா, சத்தியகுமார், சதீஸ்குமரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (18.07.2023) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4.00 மணியளவில் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 511 9538

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆணைக்குழு...

முன்வைக்கப்படவுள்ளது. நாடாளுமன்ற உறுப்பினர்களினதும், நாடாளுமன்றத்தினதும் சிறப்புரிமைகள் மீறப்படுதல் தொடர்பில் தேர்தல் ஆணைக்குழுவுடன் சம்பந்தப்பட்ட கருமங்களை விசாரிப்பதற்கும் அது தொடர்பாக பொருத்தமான விதப்புரைகளை மேற்கொள்வதற்குமான நாடாளுமன்ற விசேட குழுவொன்றை நியமிப்பது தொடர்பான பிரேரணையை நாடாளுமன்றத்தில் இன்று சமர்ப்பிக்க நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவில் தீர்மானிக்கப்பட்டிருப்பதாக நாடாளுமன்ற செயலர் குஷானி ரோஹணதீர தெரிவித்தார்.

உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழு கடந்த ஜனவரி மாதம் அறிவிப்பை வெளியிட்டிருந்தது. அரசாங்கம் தேர்தலை நடத்த விரும்பியிராத சூழலில் முன்னைய தேர்தல்கள் ஆணைக்குழு இந்த நடவடிக்கையை எடுத்திருந்தது. தேர்தலுக்கான நிதி விடுவிக்கப்படாமையால் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டிருந்தது. இதற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு எதிர்வரும் 21ஆம் திகதி எடுக்கப்படவுள்ள நிலையிலேயே அரசாங்கம் தெரிவுக்குழு ஊடாக முன்னைய தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர்களை விசாரணைக்கு உட்படுத்தும் யோசனையை செயற்படுத்த முனைகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-ஒ,5)

## மாணவியை...

வேலணை, மண்கும்பானைச் சேர்ந்த 9 வயது மாணவி மீது பாடசாலை அதிபர் தாக்குதல் நடத்தியதாக பொலிஸ் மற்றும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்தியக் கிளை ஆகியனவற்றில் முறைப்பாடு செய்யப்பட்டன. இதற்கு அமைவாக முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் பாடசாலையின் அதிபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்று நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார்.

'எஸ்லோன்' பைப்பால் மாணவியை 20 தரம் தாக்கியதாக அதிபருக்கு எதிராக குற்றம் சுமத்தப்பட்டது.

மாணவர்களின் நலனுக்காக மேலதிக வகுப்பு நடத்தியதாகவும், அதன்போது ஒரே விடயத்தை மூன்று தடவைகள் சொல்லியும் தவறிழைத்தமையால் நிதானமிழந்து அடித்ததாகவும் அதிபர் நீதிமன்றில் தெரிவித்துள்ளார்.

நிதானமிழப்பதும் ஒருவகை நோயே, இதற்கு உளவியல் சிகிச்சைதான் பெறவேண்டும் என்று அறிவுறுத்திய நீதிவான் 5 லட்சம் ரூபா பெறுமதியான ஆள் பிணையில் அதிபரை விடுவித்து வழக்கை எதிர்வரும் 31ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

இதேவேளை-அதே பாடசாலையில் கற்கும் ஏனைய 9 மாணவிகளுக்கும் இதேபோன்று அதிபர் அடித்துள்ளதாகவும் கூறப்படுகின்றது. (அ-ஒ,26,125)

# பொலிஸ் நிலையம் அருகே தீக்குளிக்க முயன்றவர் மீட்பு

யாழ்ப்பாணம், ஜூலை 18

அச்சுவேலி பொலிஸ் நிலையத்துக்கு அருகாமையில் தனக்குத்தானே பெற்றோல் ஊற்றி தீயிட முயன்ற நிலையில் பொலிஸார் அவரை மடக்கிப் பிடித்துள்ளனர். இந்தச் சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது.

அச்சுவேலி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 16 வயதான இளம்பெண் ஒருவர் காதலனுடன் சென்றுள்ள நிலையில் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. இளம் பெண் 16 வயதைக் கடந்தவர் என்பதால் அவரது முடிவே இறுதியானது என்று பொலிஸார் வீட்டாருக்குக் கூறியுள்ளனர்.

இந்நிலையில் அந்த இளம்பெண்ணைத் தாக்கிய குற்றச்சாட்டில் அவரது சகோதரரும் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டிருந்தார்.

இதனையடுத்து நீதியான விசாரணை முன்னெடுக்கப்படவில்லை எனத் தெரிவித்து பெண்ணின் உறவினர் ஒருவரே தன்னைத்தானே எரியூட்ட முயன்ற நிலையில் பொலிஸார் தடுத்து நிறுத்தியதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (அ-ஒ,27,125)

# சடலம் கரையொதுங்கியது


பருத்தித்துறை, ஜூலை 18

பருத்தித்துறை கடற்கரையில் உயிரிழந்த நிலையில் இனம் தெரியாத ஆணொருவரின் சடலம் நேற்றுத்திங்கட்கிழமை காலை கரை ஒதுங்கியுள்ளது. உயிரிழந்த நபர் உடனடியாக அடையாளம் காணப்படவில்லையெனப் பருத்தித்துறைப் பொலிஸார் தெரிவித்தனர். உயிரிழந்தவரின் சடலம் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்ட நிலையில் சம்பவம் தொடர்பில் பருத்தித்துறைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ-ஒ,26,66)

# பொட்டாசியம் அருந்தி ஒருவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 18

யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் நகைப்பட்டறையில் பணியாற்றும் 40 வயதான ஒருவர் பொட்டாசியம் அருந்தி உயிரிழந்துள்ளார். மட்டுவிலில் உள்ள அவரது வீட்டிலேயே கடன் பிரச்சினை காரணமாக அவர் இவ்வாறானதொரு தவறான முடிவு எடுத்துள்ளதாக விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ஒ,125)



# திறப்புவிழா

அராலி இந்துக் கல்லூரியின் பிரதான நுழைவாயில் திறப்புவிழா கடந்த 3ஆம் திகதி திங்கட்கிழமை கல்லூரியின் அதிபர் பாலசுந்தரம் பாலகுமார் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் கல்லூரியின் பெயர்ப்பலகை திரைநீக்கம் செய்யப்பட்டு, நினைவுக் கல்வெட்டு திரை நீக்கம் செய்யப்பட்டது.

அதன்பின்னர் பிரதான நுழைவாயில் சம்பிரதாயபூர்வமாக நாடா வெட்டித் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நுழைவாயிலானது கல்லூரியின் 1993ஆம் ஆண்டு க.பொ.த சாதாரண தர மாணவர்களது நிதிப் பங்களிப்பில் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ய-27)

# விளையாட்டு உபகரணங்கள் வழங்கல்



கோப்பாய் பிரதேச தேசோதய சபையினரால் உரும்பிராய் கிழக்கு செல்வபுரம் உதயசூரியன் விளையாட்டுக் கழகத்தின் உதைபந்தாட்ட அணிக்கு சீருடைகள் மற்றும் விளையாட்டு உபகரணங்கள் கடந்த 3ஆம் திகதி திங்கட்கிழமை வழங்கப்பட்டன.

கோப்பாய்பிரதேசதேசோதயசபைத்தலைவர்ஜீ.மயில்வாகனம் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் சமூகச் செயற்பாட்டாளர் ரமணதாஸ், சமாதான நீதிவானும் தேசோதய அமைப்பின் செயற்பாட்டாளருமான சா.தவசங்கரி, சமூகச் செயற்பாட்டாளர் இர.அனுராகரன் ஆகியோர் கலந்துகொண்டு வழங்கிவைத்தனர்.

இதற்குரிய நிதியை கொலண்ட் நாட்டில் வசிக்கும் மு.லலிதாநன்கொடையாகவழங்கினார். (ய-27)



# சேவைநலன் பாராட்டும் கௌரவிப்பும்

கிளிநொச்சி வேரவில் இந்து மகா வித்தியாலயத்தில் "வாழும் போதே வாழ்த்துவோம்" என்ற தொனிப்பொருளில் யுத்தத்துக்கு முற்பட்ட காலப்பகுதியில் கற்பித்த அதிபர்மற்றும் ஆசிரியர்களுக்கான சேவைநலன் பாராட்டும், கௌரவிப்பும், ஒன்றுகூடலும் மேற்படி பாடசாலையில் கல்வி கற்ற 2006 க.பொ.த சாதாரண தர மாணவர்களால் நடத்தப்பட்டது.

நிகழ்வில்விருந்தினர்களாகயாழ். பல்கலைக்கழகதுணைவேந்தர் பேராசிரியர் சி.ஸ்ரீசற்குணராஜா, யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி சு.பரமானந்தம், யாழ். போதனா மருத்துவமனைப் பணிப்பாளரும் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின்பணிப்பாளருமாகியமருத்துவக்கலாநிதி த.சத்தியமூர்த்திமற்றும்கோட்டக்கல்விஅதிகாரிநா.கணேஸ்வரநாதன் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர். இதன்போது ஆசிரியர்கள் மாணவர்களால் நினைவுப்பரிசு வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். தொடர்ந்து மாணவர்களும் ஆசிரியர்களால் நினைவுப் பரிசு வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். (ய-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 12 வயது...

வயாவிளான் மத்திய கல்லூரியில் தரம் 7 இல் கல்வி கற்கும் மாணவனுக்கு அவனது சிறிய தந்தை, வாய் மற்றும் முகத்தில் நெருப்பால் சுட்டு காயங்களை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிவித்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிறுவன் சேர்க்கப்பட்டுள்ளான்.

சிறுவனின் தாயாரின் இரண்டாவது கணவரே சூடு வைத்துள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது. சிறுவனுக்கு சூடு வைத்துவிட்டு அந்தக் காயங்கள் வெளியில் தெரியாமல் இருப்பதற்காக முகக்கவசத்தை அணிவித்து பாடசாலைக்கு அனுப்பியுள்ளதாகவும் விசாரணைகளில் கண்டறியப்பட்டுள்ளது. (அ-ஓ.5)

## போக்குவரத்துத்...

போலிச் சாரதி அனுமதிப்பத்திரத்துடன் நேற்றும் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளைத் தொடர்ந்து யாழ்ப்பாண மாவட்ட மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள அதிகாரிகளிடமும் விசாரணைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாகத் தெரியவருகின்றது.

யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜகத் நிஷாந்தவின் கீழ் இயங்கும் மாவட்ட விசேட குற்றவிசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி குணறோயன் தலைமையிலான குழுவினரால் 8ஆம் திகதி சனிக்கிழமை போலிச் சாரதி அனுமதிப்பத்திரம் தயாரித்த குற்றச்சாட்டில் இருவர் கைதாகினர். இதனையடுத்து மாவட்ட மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்துக்கு பொலிஸார் தகவல் வழங்கியிருந்தனர். இந்த நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை போலிச் சாரதி அனுமதிப்பத்திரத்தை புதுப்பிக்க வந்த தெல்லிப்பழையைச் சேர்ந்த ஒருவர் கைதாகியிருந்தார். இந்த நிலையில் நேற்றையதினம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைச் சிற்றூழியர் ஒருவரும் இன்னொருவருமாக இருவர் போலிச்சாரதி அனுமதிப் பத்திரத்துடன் கைதாகினர்.

முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் யாழ். மாவட்டத்தில் குறைந்தது 60 பேர் வரையிலாவது போலிச் சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றுள்ளமை தெரியவந்துள்ளது.

யாழ். மாவட்டச் செயலகத்தில் நடைபெறும் எழுத்துப் பரீட்சைக்கு இரண்டு தடவைகள் தோற்றி சித்தியடையத்தவறியவர்களை இலக்கு வைத்து, மாவட்டச் செயலகத்துக்கு அருகிலுள்ள முகவர்கள் ஊடாகவே போலிச் சாரதி அனுமதிப் பத்திரம் வழங்கல் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

இந்த விவகாரத்துடன் தொடர்புடையவர்களை முழுமையாகக் கைது செய்வதற்காக நீதிமன்றத்தின் அனுமதியைப் பெற்று மேலதிக விசாரணைகளைத் தொடர்வதற்கும், யாழ். மாவட்டச் செயலரின் ஒத்துழைப்புடன் மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள அதிகாரிகளிடம் விசாரணைகளை முன்னெடுப்பதற்கும் பொலிஸார் தீர்மானித்துள்ளனர். (அ-ஓ.26)

## 13ஐ வலியுறுத்திய...

இதன் காரணமாகவே இம்முறை 13ஐ வலியுறுத்தி அனுப்பப்படும் கடிதத்தில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி கையெழுத்திடவில்லை என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன், அமெரிக்கத் தூதுவரிடத்தில் தெரிவித்துள்ளார்.

வடக்கு-கிழக்கைப்பிரதிநிதித்துவப்படுத்தும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, புளொட், ரெலோ, தமிழ் மக்கள் கூட்டணி ஆகிய கட்சிகளின் தலைவர்களை இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் மதியபோசனத்துடன் நேற்றுத் திங்கட்கிழமை சுமார் 2 மணி நேரம் சந்தித்துக் கலந்துரையாடினார். இந்தச் சந்திப்பின்போதே சுமந்திரன் மேற்படி விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

சந்திப்பின் ஆரம்பத்தில் அமெரிக்கத் தூதுவர், நாங்கள் வழமையாகத் தனித்தனியேதான் கட்சிகளைச் சந்திப்பது வழமை. ஆனால், ஜனாதிபதி ரணிலின் இந்தியப் பயணத்துக்கு முன்பதாக தமிழ்த் தரப்பிலிருந்து 3 கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. இந்த வேறுபாடுகளை நாம் விளங்கிக்கொள்வதற்காகத் தான் ஒன்றாக அழைத்துள்ளோம் என்று குறிப்பிட்டுள்ளார்.

க.வி.விக்னேஸ்வரன், சித்தார்த்தன் மற்றும் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர், 13 ஆவது திருத்தம் 1987ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட நிலைமைக்காவது கொண்டு செல்லப்படவேண்டும். 13ஆவது திருத்தம் அறிமுகப்படுத்தப்படும்போது அதில் பல விடயங்கள் இருந்தன. அவை இன்று பறிக்கப்பட்டு பல வீனமாக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டனர். இதன்போது கஜேந்திரகுமார் பொன்னம்பலம், 1987ஆம் ஆண்டிலிருந்து இன்று வரையில் உயர் நீதிமன்றத்தின் ஊடாக 30 வியாக்கியானங்கள் வரையில் 13ஆவது திருத்தம் தொடர்பில் வழங்கப்பட்டுள்ளன. எனவே 1987ஆம் ஆண்டிலிருந்தவாறான 13 ஆவது திருத்தச் சட்டம் மீளவும் கொண்டு வரப்படவேண்டும் என்பது நடைமுறை சாத்தியமற்றதும் நீதிமன்ற அவமதிப்பதாகவும் அமையும்.

13ஆவது திருத்தத்தைத் தாண்டிய எதற்கும் இந்தியா தயாரில்லை என்று சித்தார்த்தன் இதன்போது தெரிவித்தார்.

'இந்தியா தன்னுடைய தேவைக்காக 13ஆவது திருத்தத்தைத் தாண்டிய ஒன்றைப்பற்றிப் பேசாமல் இருக்கின்றது. அதற்காக ஒன்றுமில்லாத 13ஆவது திருத்தத்தை எப்படி நீங்கள் ஆதரிக்க முடியும்? 13 இல் ஒன்றுமில்லை என்பதைத்தானே தமிழ் மக்கள் சார்பில் நீங்கள் எடுத்துரைக்கவேண்டும்' என்று குறிப்பிட்ட கஜேந்திரகுமார், தேர்தல் காலங்களில் மக்கள் முன்பாக சமஷ்டியை வலியுறுத்தும் இவர்கள் பின்னர் 13ஆவது திருத்தம் என்று பேசுகின்றனர். இந்த மேசையில் இன்று பேசுவதை மக்கள் முன்வைத்து தேர்தலில் போட்டியிடுவதற்கு இவர்கள் தயாராக இருக்கின்றார்களா? என்றும் கேள்வி எழுப்பினார்.

இதேவேளை - இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நிலைப்பாட்டை சுமந்திரன் விளக்கினார்.

'கடந்த ஆண்டு ஜனவரி மாதம் தமிழ்க் கட்சிகள் இணைந்து இந்தியப் பிரதமர் மோடிக்கு கடிதம் அனுப்பின. 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப் படுத்துமாறு அதில் கோரியிருந்தன. அந்தக் கடிதத்துக்குப் பின்னர் இந்தியாவின் நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்பட்டது. இலங்கையில் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தி அதிலிருந்து அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வுக்கு வலியுறுத்தி வந்த இந்தியா, அந்தக் கடிதத்தின் பின்னர் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதுடன் சுருக்கிக்கொண்டது. இது எமக்கு மிகப்பெரிய பின்னடைவாகும். இதன் காரணமாகவே இம்முறை 13 ஆவது திருத்தத்தை மாத்திரம் வலியுறுத்தி எழுதப்பட்ட கடிதத்தில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி கையெழுத்திடவில்லை. நாம் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துமாறும் கோரமாட்டோம். அதை நீக்குமாறும் கோரமாட்டோம்' -என்று குறிப்பிட்டார். (அ-ஓ.5)

## சிங்களவருக்கு...

லாமல் சர்வதேச சமூகத்தை ஏமாற்றுவதற்காக நடத்தப்படும் பேச்சுகளில் தமிழர் தரப்பு பங்கேற்று எமக்கான வாய்ப்புகளை பாழாக்கக்கூடாது- இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அமெரிக்கத் தூதுவருக்கு சுட்டிக் காட்டியுள்ளார்.

அமெரிக்கத்தூதுவருக்கும் தமிழ்க் கட்சிகளின் தலைவர்களுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று மதியம் அமெரிக்கத்தூதுவரின் இல்லத்தில் நடைபெற்றது. இந்தச் சந்திப்பில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி சார்பில் எம்.ஏ.சுமந்திரன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சார்பில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தமிழ் மக்கள் கூட்டணி சார்பில் க.வி.விக்னேஸ்வரன், புளொட் சார்பில் த.சித்தார்த்தன், ரெலோ சார்பில் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் பங்கேற்றனர்.

சந்திப்பில் அமெரிக்கத் தூதுவர், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தமிழ் மக்களின் விடயங்கள் தொடர்பில் எவ்வளவு தூரம் கரிசனை செலுத்துகின்றார் என்பது தொடர்பில் தமிழ்க் கட்சிகளின் கருத்தை அறிய விரும்புவதாகத் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களான த. சித்தார்த்தன் மற்றும் செல்வம் அடைக்கலநாதன் இருவரும், ரணிலால் எதுவும் செய்யமுடியாது. தன்னைப் பாதுகாத்துக்கொள்ளும் நோக்கிலேயே செயற்படுகின்றார் என்று குறிப்பிட்டுள்ளனர்.

இதன்போது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தமிழ் மக்கள் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர் க.வி.விக்னேஸ்வரனை நோக்கி, 'நீங்கள் இவர்களுடன் (செல்வம், சித்தார்த்தன்) இணைந்துதான் இந்தியாவுக்கு கடிதம் எழுதியுள்ளீர்கள். 13ஆவது திருத்தம் நடைமுறைப்படுத்தப்படுவது மாத்திரமல்ல இடைக்கால நிர்வாகசபை யோசனையையும் ஜனாதிபதி ரணிலிடம் கொடுத்துள்ளீர்கள். அவரால் எதுவும் செய்யமுடியாது என்று இவர்கள் இங்கே கூறுகின்றனர். அப்படியென்றால் ஏன் அதனை ரணிலிடம் கொடுத்தீர்கள்? ரணில் நேர்மையாக தமிழ் மக்களின் விடயங்களை கையாள்கின்றார் என்று சர்வதேச சமூகத்தை ஏமாற்றுவதற்கு முயல்கின்றீர்களா?' என்று கேள்வி எழுப்பியுள்ளார்.

'அதற்காக நாம் சும்மா இருக்க முடியாதே. முயற்சிகளை எடுக்கவேண்டும்' என்று விக்னேஸ்வரன் பதிலளித்துள்ளார்.

இதன் பின்னர் கருத்துத் தெரிவித்த கஜேந்திரகுமார் பொன்னம்பலம், 'ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பலவீனமாக இருக்கின்றார். அவர் நாட்டைப் பொருளாதார ரீதியாக முன்னேற்றுவதாகக் காட்டியே தேர்தலை எதிர்கொள்ளப்போகின்றார். பொருளாதார ரீதியாக நாடு பலமடையவேண்டும் என்றால் சர்வதேச உதவிகள் அவசியம். ரணில் - ராஜபக்சக்களுக்கு அழுத்தம் கொடுப்பதற்கான இந்தச் சந்தர்ப்பத்தை தமிழ்த் தரப்புகள் பயன்படுத்தவேண்டும்.

இந்த நாட்டில் இனப்பிரச்சினை தீராமல் சர்வதேச சமூகம் உதவிகளைச் செய்யாது இனப்பிரச்சினை தீரவேண்டுமாக இருந்தால் தமிழ் மக்கள் நிராகரிக்கும் ஒற்றையாட்சிக்கு உட்பட்ட தீர்வை முன்வைக்கமுடியாது. சர்வதேச சமூகம் உதவிகளைச் செய்யாவிட்டால் நாட்டைப் பொருளாதார ரீதியாகப் பலப்படுத்த முடியாது. இந்த உண்மையைச் சிங்கள மக்களுக்கு ஜனாதிபதி ரணில் சொல்லவேண்டும். பேச்சுக்கு நேர்மையாக நடக்கவேண்டுமெனில் இதைச் சொல்லவேண்டும். இவை எதுவும் இல்லாது பேச்சு எப்படி நடக்கப்போகின்றது என்ற எந்தவொரு வரையறையும் இல்லாமல் அதில் கலந்துகொள்வதில் அர்த்தமில்லை.

இந்த நிலைப்பாட்டை இந்த மேசையிலுள்ள அனைத்து தமிழ்த் தரப்புகளும் ஒன்றிணைந்து எடுத்து ரணிலின் பேச்சுக்கு செல்லாமல் விட்டிருந்தால் சர்வதேச சமூகமும் இலங்கைக்கான உதவிகளை மறுபரிசீலனை செய்திருக்கும். நாட்டில் மீண்டும் பிரச்சினை ஏற்பட வாய்ப்புள்ளது என்று சர்வதேச சமூகம் உணர்ந்தால் உதவிகளை வழங்காது. இலங்கை உதவிகளைப் பெற்றுக் கொள்வதற்காக சர்வதேச சமூகத்தின் சொல்லைக்கேட்டிருக்கும். மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கலாம், என்று சுட்டிக் காட்டியுள்ளார்.

'ரணில் விக்கிரமசிங்கதான் ஜனாதிபதி. அவருடன்தான் விடயங்களைக் கையாளவேண்டும் என்பதையும் மனதில் வைத்திருங்கள்' என்று அமெரிக்கத் தூதுவர் பதிலளித்துள்ளார். (அ-ஓ.5)

## நாவாந்துறையில்...

சேர்க்கப்பட்டுள்ளனர். 3 மணி நேரம் நீடித்த மோதல் விசேட அதிரடிப்படையினரின் களமிறக்கத்துடன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

நாவாந்துறை வடக்கு மற்றும் தெற்கு கிராமங்களைச் சேர்ந்த இரு குழுக்களுக்கு இடையிலேயே இந்த மோதல் இடம்பெற்றுள்ளது. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் உருவான முறுகலின் தொடர்ச்சியாகவே நேற்று மாலை 6 மணியிலிருந்து இரவு 9 மணி வரை இரு கிராமங்களையும் சேர்ந்தவர்கள் மோதலில் ஈடுபட்டுள்ளனர். இதனால் அங்குள்ள பிரதான வீதிகள் போத்தல் துண்டுகளால் நிறைந்திருந்தன. மோதல் காரணமாக அந்தப் பகுதியில் பெரும் பதற்றம் நிலவியது.

பொலிஸாரால் நிலைமையைக் கட்டுக்குள் கொண்டுவரப்படாததையடுத்து பிரதேச செயலர் சா.சுதர்சனின் கோரிக்கைக்கு அமைவாக விசேட அதிரடிப் படையினர் களமிறக்கப்பட்டனர். சிறிது நேரத்தில் மோதல் நிலைமை கட்டுக்குள் கொண்டுவரப்பட்டாலும் அந்தப் பகுதியில் நேற்று இரவு வரையில் பதற்றம் நிலவியது. (அ-ஓ.5,26)

## திருமணமாகி...

கொல்லன்கலட்டியைச் சேர்ந்த சுகிர்தராசா நிதர்சினி (வயது - 27) என்பவரே உயிரிழந்துள்ளார்.

மூன்று நாள் காய்ச்சலால் அவர் பாதிக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று திடீரென வலிப்பு ஏற்பட்டுள்ளது. உடனடியாக தெல்லிப்பழை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிறிது நேரத்தில் உயிரிழந்துள்ளார்.

இறப்பு விசாரணைகளை வலிகாமம் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ஆ. ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். உடற்கூற்றுப் பரிசோதனைகள் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் முன்னெடுக்கப்பட்டது. (அ-ஓ.26,27)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## எப்போதும்...

தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.

தமிழ்க் கட்சித்தலைவர்களுடன் நேற்றுமதியம் இடம்பெற்ற சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

'இலங்கையில் உள்நாட்டுப்போர் முடிவடைந்த பின்னர் அமெரிக்கா ஆக்கபூர்வமான நிலைப்பாடுகளை எடுத்தது, அது தொடரவேண்டும். இன்னும் கடுமையான நிலைப்பாடுகளை எடுக்கவேண்டும்' என்று நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

'சர்வதேச சமூகத்திடமிருந்து அதிகளவில் எதிர்பார்க்க முடியாது. எல்லாவற்றையும் செய்யமுடியாது. சர்வதேச சமூகத்துக்கும் வரையறை உண்டு' என்று அமெரிக்கத் தூதுவர் பதிலளித்துள்ளார். அத்துடன் இலங்கையில் வடக்கில் மாத்திரமல்லாது தெற்கிலும் சர்வதேச சமூகமே உதவவேண்டும் என்ற மனோநிலை காணப்படுவதை தான் அவதானித்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-ஓ,5)

## 13ஐ நடைமுறைப்படுத்த...

சிலரால் இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கான கடிதம் ஒன்று யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத் தூதரகத்தில் நேற்றுக் கையளிக்கப்பட்டுள்ளது. (அ-ஓ,26)

## தெரிவுக்குழு...

என்பது குறித்து ஆராய 'தெரிவுக்குழுவென்றை' நியமிப்பதற்கான முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இவ்விடயத்தில் அரசாங்கம் மெல்லக் கவனம் செலுத்தி புதிதாக நியமிக்கப்பட்டுள்ள தேர்தல் ஆணைக்குழு மீதும், நீதிமன்றத்தின் முன்னுள்ள விசாரணைகளிலும் செல்வாக்குச் செலுத்தி தனது நிகழ்ச்சி நிரலை நடைமுறைப்படுத்த நினைக்கிறது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

அவர்விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நாடாளுமன்றத்தில் தேர்தல்கள் ஆணைக்குழுவின் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் செயற்பாடுகள் தொடர்பான தெரிவுக்குழுவொன்று நியமிக்கப்படவுள்ளமையானது, தற்போதைய தேர்தல் ஆணைக்குழு அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரல் வரம்புகளுக்குள் செயற்பட வேண்டும் என்பதையும், இல்லாவிட்டால் நாடாளுமன்றத் தெரிவுக் குழு முன் ஆஜராக வேண்டும் என்ற தெளிவானமுறையற்ற அச்சுறுத்தல் விடுப்பதற்குமே.

அதேபோன்று நீதிபதிகள் அரசின் கருத்துகளுக்கு ஏற்ப செயற்படவில்லை என்றால், நீதிமன்ற உத்தரவுகளை நடைமுறைப்படுத்தவில்லை என்றால் மேலான நீதிபதிகளை தெரிவுக் குழு முன் கொண்டு வந்து அழுத்தம் கொடுக்கவும் முடியும் என்பதை இது தெளிவாக உணர்த்துகின்றது.

வங்குரோத்தடைந்த நாட்டில் முறைமை மாற்றம் ஏற்படும் என அனைவரும் பேசிக் கொண்டிருக்கும் வேளையில் இந்த அரசியல் சூதாட்டதை நடைமுறைப்படுத்தி காலாவதியான, மக்கள் வெறுத்த பழைய முறைமையையே இந்தத் தெரிவுக் குழுவின் ஊடாக தொடர்ந்தும் நடக்கும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார். (அ-ஓ,இ)


### வேலையாட்கள் தேவை

யாழ். நகரில் இயங்கும் பிரபல இலத்திரனியல் காட்சி அறைக்கு வேலைக்கு இருபாலாரும் தேவை.(கணனி அறிவுள்ளவர்கள் விரும்பத் தக்கது.)

1. கணக்கு எழுதுனர்
2. விற்பனையாளர்.

**021 222 6807**
**070 304 3633**

### மணமகன் தேவை

01. கரவெட்டி. இந்து கௌரவகுலம் (K). 1988. சுவாதி. Phd in Bio chemistry, Germany Citizen மணமகளுக்கு மணமகன் தேவை. பதிவெண் - 30017
02. மல்லாகம் - அளவெட்டி. இந்துகௌரவகுலம் (K). 1995. ரேவதி. Graduate, UK Citizen மணமகளுக்கு மணமகன் தேவை. பதிவெண் - 33400
03. அச்சுவேலி. இந்து கௌரவகுலம் (K). 1994. பூராடம். Masters in Chemistry, Graduated in Queen Mary Univercity, UK Citizen மணமகளுக்கு மணமகன் தேவை. பதிவெண் - 34588
04. கரவெட்டி - பருத்தித்துறை. இந்து கௌரவகுலம் (K). BSc in IT, அழகான மணமகளுக்கு மணமகன் தேவை. பதிவெண் - 33052
05. கரவெட்டி - பருத்தித்துறை. இந்துகௌரவகுலம் (K). 1993. சுவாதி. MBBS Doctor மணமகளுக்கு மணமகன் தேவை. பதிவெண் - 33051
06. சாவகச்சேரி. இந்து. குருகுலம். 1987. அனுசம். MBBS Doctor, மணமகளுக்கு மணமகன் தேவை. பதிவெண் - 28701
07. தெல்லிப்பழை. இந்து. குருகுலம். கொழும்பு முக்குலத்தோர் கலப்பு. 1982. கேட்டை. BSc, MSc, Diploma in Banking அழகான மணமகளுக்கு மணமகன் தேவை. பதிவெண் - 277704
08. K.K.S, இந்து குருகுலம். 1987. மிருகசீரிடம். MBBS Doctor மணமகளுக்கு மணமகன் தேவை. பதிவெண் - 32258

தொடர்புகளுக்கு- S.Sharma J.P Astrologer Phone - 077 539 3728 Whatsapp - 077 803 8193

(CS/51297)AH-1

### விற்பனைக்கு

V.S. எறும்பு கொல்லி பவுடர் விற்பனைக்குண்டு.

- ✓100g பைக்கற்றுக்களில் விநியோகிக்கப்படும்.
- ✓செயற்பாட்டுத் திறன் கொண்டது.
- ✓உத்தரவாதம் உடையது.
- ✓வியாபாரிகளுக்கு விலைக் கழிவு உண்டு.
- ✓விவசாய செயற்பாடுகளுக்கும் பயன்படுத்தலாம்.

(CS/51291)AH-1

**077 633 1914**

### ALLIANCE FRANCAISE DE JAFFNA

af பிரெஞ்சு மொழி



- யாழ்ப்பாணத்தில் French Embassy கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் Alliance Francaise மட்டுமே.
- அங்கீகரிக்கப்பட்ட Certificates International Diplomas (delf )
- தமிழ் மொழிமூலம் பிரஞ்சு நாட்டு ஆசிரியரினாலும் கற்பிக்கப்படும்
- French Embassy இன் அனுமதியுடன் திருமண அத்தாட்சிப் பத்திரங்கள் தமிழ் மொழி மூலம் மொழி பெயர்ப்புச் செய்து கொடுக்கப்படும். (இங்கே மட்டும்).

021 222 8093 17, Kandy Road, Jaffna

### மணமகள் தேவை

01. காரைநகர். இந்து கௌரவகுலம் (V). 1975. விசாகம். MSc, Own Business, UK Citizen மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 25104
02. யாழ்ப்பாணம். இந்து கௌரவகுலம் (V). 1984. சுவாதி. BSc, Business Management, UK Citizen மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 31799
03. மீசாலை. இந்து கௌரவகுலம் (V). 1988. சதயம். MSc in Engineering, UK Citizen மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 29216
04. பருத்தித்துறை. இந்து கௌரவகுலம் (V). 1979. அச்சுவினி. BSc (Jaffna), MSc (UK), Own Business, UK Citizen Vegetarian மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 32669
05. பண்டத்தரிப்பு. இந்து கௌரவகுலம் (V). 1985. பரணி. O/L, Receptionist (Hospital) Germany Citizen, Vegetarian, Divorce மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 33104
06. திருகோணமலை. இந்து கௌரவகுலம் (V). 1984. ரேவதி. Qualified Draftman, Vegetarian மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 33001
07. கரம்பன் - Jaffna Town, இந்து கௌரவகுலம் (V). 1988. ரோகினி. BSc Engineering, Canada Citizen மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 28033
08. உரும்பிராய் - இணுவில். இந்து கௌரவகுலம் (V). 1991. பூரம். Network Engineer, Australia Citizen மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 29309
09. மீசாலை. இந்துகௌரவகுலம் (V). 1988. சதயம். BSc Engineer, UK Citizen மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 29216

தொடர்புகளுக்கு- S.Sharma J.P Astrologer Phone - 077 539 3728 Whatsapp - 077 803 8193

(CS/51298)AH-1

## மரண அறிவித்தல்

மண்ணில் 06 . 03 . 1943



விண்ணில் 13 . 07 . 2023

### திருமதி மரிஸ்ரெல்லா (ரதி) பெனடிக்ட்

இலக்கம் 41. யாழ் வேம்படி வீதியை பிறப்பிடமாகவும் கொழும்பு வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மரிஸ்ரெல்லா (ரதி) பெனடிக்ட் கடந்த (13.07.2023) வியாழக்கிழமை நித்திய இளைப்பாறுதல் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னப்பு - அக்னஸ் தம்பதிகளின் புதல்வியும் காலஞ்சென்ற ஜோசப் பெனெடிட் அவர்களின் அன்பு மனைவியும். லெஸ்லி (லண்டன்). சுமதி. மோகன் (பிரான்ஸ்). செல்லா (கனடா). பிரியா (இந்தியா) ஆகியோரின் அன்பு தாயாரும். பிறிஸ்கா. குலேந்திரராஜா (Appolo Opticals). அம்பிகா. சுதா. சுரேஷ். ஆகியோரின் அன்பு மாமியாரும் சோபினி. ஜோனத்தன். ஜொஹஹான். டினுஷா. டெனிஷன். டிரொக்ஷி. ரவிசங்கர். விமலா. பிரியா. பென்ஜோன்சன். ஷாருக்கா. நேருக்கா. எரிக். மிதுசன். மாதுஷி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான ஜீவரட்ணம். குணரட்ணம். ஜெயரட்ணம். ஆகியோரினதும் மற்றும் புஷ்பராணி. பிலோமினா. கிறிஸ்டினா. பியாட்ரிஸ். ஜசிந்தா. விஜயரட்ணம். தனரட்ணம். துரைரட்ணம் ஆகியோரின் அன்பு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (18.07.2023) செவ்வாய்க்கிழமை இலக்கம் 27/22. யாழ் ஈச்சமோட்டை. முதலாம் ஒழுங்கையிலுள்ள அவரது இல்லத்தில் காலையிலிருந்து அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை (19.07.2023) புதன்கிழமை மாலை 3:30 மணியளவில் யாழ் கொஞ்சேஞ்சி மாதா ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு நல்லடக்கத்திற்காக புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை மிக மன வேதனையுடன் தெரியப்படுத்துகின்றோம். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 51283)AH-1

077 674 5634, 077 663 3718

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி பாலாம்பிகை ஸ்ரீதரன்

29.07.2022 அமரத்துவமாகி ஓராண்டு நிறைவில்
அவர் நினைவாக

ஆண்டொன்று நிறைந்ததோ
அகிலத்தில் நீயகன்று
ஈண்டு நீரிருந்து எம்மையெல்லாம்
வாழ வைத்தீர்
காண்டரிய இடத்தில் கண் அணைய
தாயே பாலாம்பிகையே
தூண்டாமணியே தூயவளே
துயரென்றும் மாறாதே
ஆறாத மனத்தாங்கல் கொண்டோமே
ஆயிரம் கண்ணுடைய அம்பிகையே
காத்தருள்வாய்!
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

அன்பு மறவா...
உடுவில் கிழக்கு, சுன்னாகம். கணவர், பிள்ளைகள், மருமக்கள். பேரப்பிள்ளைகள், உறவுகள்

(CS/51275)AH-


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 18.07.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.